செந்தமிழ்

14 12

17-7-1932

N28
N32·4·12
208695

12 JUL 1932

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

## ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியாரியற்றிய மணிமஞ்ஜரி.

நான்காவது ஸர்க்கம்.

(முன் தொடர்ச்சி)

24. ஹஸ்தினாவதியில் குரு பாண்டவர்களுக்கு தனுர் வித்தையைச் சொல்லிக்கொடுக்க த்ரோணாசாரியார் ஆசாரியனாய் அமரவும் பாண்டவர்கள் அவரை அணுகி அவரிடமிருந்து எல்லா அஸ்திர சஸ்திரங்களையும் தெரிந்துகொண்டு யுத்தம் செய்வதில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்களாயினர். த்ரோணாசாரியார் தன்னை அவமானப்படுத்திய த்ருபதராஜனை யுத்தத்தில் தோற்கடித்து கயிறுகளால் கட்டி தன்னிடம் கொண்டுவரவேண்டுமென்று சொன்னதை அவருடைய இதர சிடர்களான துரியோதனாதிகள் செய்யமுடியாமற்போய் த்ருபதராஜனுடைய சைனியங்களால் தோல்வியடைந்து அவமானமடையவும் பாண்டவர்கள் அஸ்திர சஸ்திரங்களைக்காட்டி த்ருபதராஜனை தோற்கடித்து தங்கள் குருவின் இஷ்டப்படி த்ருபதனைக்கட்டி த்ரோணரிடம் நிறுத்தினர். அஸ்திரசஸ்திரங்களில் இந்த பாண்டவர்களுக்கிருந்த அதிசய சாமர்த்தியத்தைக்கேட்டு ஸ்ரீகிருஷ்ணர் மகா சந்தோஷமடைந்து தன் சந்தோஷத்தை அறிவிக்க கிருதவர்மாவை ஹஸ்தினாவதிக்கு அனுப்பி பகவான் பாண்டவர்களிடம் மிகுந்த அன்புவைத்திருக்

208695 800 073



[illegible] உலகில் ப்ரஸித்தப்படுத்தி க்ருஷ்ணனைச்சேர்ந்த [illegible]ளான தேவாம்சம் பெற்ற எல்லா அரசர்களும் பாண்டவர்களிடம் விசுவாசமாய் இருக்கும்படி செய்தார். ஸ்ரீக்ருஷ்ணருடன் இவ்வாறு சேர்ந்து பாண்டவர்கள் சந்தோஷமடைந்தனர். 25. பகவான் தம் பூர்ண ஸ்நேகத்தை வைத்திருந்த பாண்டவர்களை தம்முடைய நகரத்திற்கு வரவழைத்து அவர்களுக்கு மிகவும் ஸத்காரம் செய்து வெகுநாள் தம்மிடம் வைத்துக்கொண்டிருந்து பிறகு அவர்களுக்கு விடைகொடுத்து ஹஸ்தினாவதிக்கு அனுப்பினார். அவர்கள் தம் ஊருக்குப்போனார்களாயினும் ஸ்ரீக்ருஷ்ணமூர்த்தியையே ஸதா எண்ணிக்கொண்டு அவரிடமே ஈடுபட்டிருந்தனர். 26. ஸ்ரீக்ருஷ்ணனை அவர்கள் தங்களுக்கு யஜமானனென்று ஒரு சமயம் சரணமடைவார்கள். தங்களுக்கு ஹிதம்செய்யும் ஸுஹ்ருத்தென காலில் விழுவார்கள். தங்களுடைய நெருங்கிய பந்துவென்று மற்றொரு சமயமும் ஆப்தஸ்நேகிதனென்று ஓர் சமயமும் தங்களைக்காக்கும் முக்ய ரக்ஷகனென்றோர்சமயமும் இவ்வாறு எப்பவும் எல்லாவகையிலும் ஸ்ரீக்ருஷ்ணமூர்த்தியையே சரணமடைந்திருந்தனர். 27-28. பாண்டவர்களிடம் மாச்சரியங்கொண்டிருந்த கௌரவர்கள் ஹஸ்தினாவதியிலிருந்து வெளியே அவர்களை துரத்தி வாரணாவதிக்கு அனுப்பி அரக்கு மாளிகையில் அவர்களை கொளுத்திவிட ஏற்பாடு செய்யவும் விதுரன் செய்த சூழ்ச்சியால் அவர்கள் அரக்குமாளிகையினின்றும் தப்பி கங்கையைத் தாண்டி அக்கரையிலிருந்த ஹிடிம்பாவனத்திற்கு வந்து அங்கிருந்த ஹிடிம்பாஸுரன் யுத்தத்திற்கு வர அவனை பீமசேனர் கொன்று அவனுடைய தங்கையான ஹிடிம்பியை மணந்தார். பிறகு ஏகசக்ராநகரம் வந்து அங்கு ப்ராம்மண வேஷத்துடன் ஓர் ப்ராம்மணனின் வீட்டில் தங்கியிருந்து பாண்டவர்கள் பிக்ஷாடனம் செய்துவரும்பொழுது பீமசேனர் தாயாரான குந்தியின் ப்ரார்த்தனையின்பேரில் அந்த வீட்டுக்கார ப்ராம்மணனுக்காக ஓர் வண்டி நிறைய அன்னத்தை அங்கு வசித்திருந்த பகாஸுரனுக்குக் கொண்டுபோய் கொடுக்கச்சென்று பகாஸுரனுடன் மல்யுத்தம் செய்து அவனைக்கொன்றார். பாஞ்ச[illegible] நாட்டில்



த்ருபதராஜனின் பெண்ணான த்ரௌபதிக்கு ஸ்யம்வரமென்று அறிந்து இவர்கள் அவ்வூரிலிருந்து சுயம்வரத்திற்குப்போய் ப்ராம்மணர்களுடன் ஸ்வயம்வரமண்டபத்தில் உட்கார்ந்திருக்க அங்கு பந்தயமாக வைத்திருந்த தனுஸ்ஸை நாணேற்ற முடியாமல் எல்லா அரசர்களும் அவமானமடைய ப்ராம்மண வேஷத்துடனிருந்த அர்ஜுனன் தனுஸ்ஸை வளைத்து மேலே கட்டியிருந்த லக்ஷ்யத்தை கீழே பார்த்துக்கொண்டு அடித்து த்ரௌபதியால் மாலையிடப்பட்டான். ப்ராம்மணவேஷத்துடனிருந்த பாண்டவர்கள் த்ரௌபதியுடன் அந்நகரில் அவர்கள் தங்கியிருந்த ஓர் குயவன் வீட்டிற்கு வந்துசேர பாண்டவர்களின் அடையாளங்களை கண்டுகொண்டு இரவில் இவர்கள் தங்கியிருந்த வீட்டிற்கு ஸ்ரீக்ருஷ்ணர் ஏகாந்தமாய் வந்து த்ரௌபதி கிடைத்ததைப்பற்றி பரம சந்தோஷமடைந்து அவஸரமாய் தான் த்வாரகைக்குப் போய் வரவேண்டியிருப்பதாய்ச் சொல்லி அவர்களிடமிருந்து விடைபெற்று த்வாரகைக்கு போய் சேர்ந்தார். அங்கு இறந்துபோய் பந்தோபஸ்தாய் வைக்கப்பட்டிருந்த தன் மாமனார் ஸத்ராஜித் ராஜனின் ப்ரேதத்திற்கு ஸம்ஸ்காரங்களைச் செய்து ஸத்ராஜித் ராஜனைக் கொன்ற சததனுவென்ற யாதவனைக்கொன்றுவிட்டு மீண்டும் பாஞ்சால நாட்டில் பாண்டவர்களுக்கும் த்ரௌபதிக்கும் நடந்த விவாககாலத்தில் வந்து சேர்ந்தார். விவாககாலத்தில் ஸ்ரீக்ருஷ்ணர் பாண்டவர்களுக்கு ஏராளமான சொத்துக்களைத் தந்து அவர்களுடன் வெகுநாள் வசித்திருந்தார். 29. அச்சமயம் த்ருதராஷ்டிரன் பாண்டவர்களை ஹஸ்தினாவதிக்கு வரவழைத்து யுதிஷ்டிரனுக்கு யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்து பாதிராஜ்யத்தைத் தந்துவிடவும் பகவான் அவர்களுடன் வந்து இந்திரப்ரஸ்தத்தை பாண்டவர்களின் ராஜதானியாய்ச் செய்து விச்வகர்மாவைக்கொண்டு அற்புதமான நகரத்தை அங்கு நிர்மாணம் செய்யச் செய்து பாண்டவர்களை நிஷ்கண்டகமாய் அங்கு ராஜ்யபாரம் செய்யும்படி செய்து அவர்களுடன் கூடவே சிலகாலம் வசித்தார். ஒருஸமயம் ஸ்ரீக்ருஷ்ணர் அர்ஜுனனுடன் யமுனையின் கரையில் வேட்டையாடிக்கொண்டிருந்த ஸமயம் யமுனையின் தங்கையான காளிந்தி என்பவள் தன்னை மணக்கும்படி பகவானை ப்ரார்த்திக்க ஸ்ரீக்ருஷ்ணர் அவளை விவாகம்

செய்துகொண்டு த்வாரகைக்கு வந்துசேர்ந்தார். 30. அயோத்தியில் நக்னஜித்ராஜனின் பெண்ணான நீலாதேவியின் சுயம்வரத்தில் பந்தயமாக வைத்திருந்த ஏழு முறட்டுக்காளைகளை அடக்கிக் கட்டி அவளை மணந்தார். ஸ்ரீ கிருஷ்ணர் அவருடைய தந்தை வஸுதேவனின் தங்கையான ராஜாதிதேவியின் குமாரத்தியான மித்ரவிந்தா தேவியால் சுயம்வர காலத்தில் மாலையிடப்பட்டவராய் அவளை மணந்தார். அப்படியே மற்றொரு அத்தையான சுருதகீர்த்தி என்பவளின் மகளான பத்ராதேவி அவளுடைய அண்ணன்மார்களான கேகய ராஜாக்களால் ஸ்ரீ கிருஷ்ணருக்கு கன்னிகாதானம் செய்யப்பட பகவான் அவளை விவாகம் செய்து கொண்டார். மத்ரதேசத்து பிருஹத்ஸேனராஜனின் மகளான லக்ஷ்மணாதேவியின் சுயம்வரம் நடந்து அதில் ஸ்ரீ கிருஷ்ணர் தனுஸ்ஸை வளைத்து லக்ஷியத்தை அடித்து லக்ஷ்மணாதேவியால் மாலையிடப்பட்டு அவளை விவாகம் செய்துகொண்டார். ஆக ருக்மணி, ஸத்யபாமா, ஜாம்பவதி, காளிந்தி, நீலா, மித்ரவிந்தா, பத்ரா, லக்ஷ்மணா, இந்த எட்டு பத்னிகளும் பகவானுடைய அஷ்டமகாமஹிஷிகள் எனப்படுவார்கள். இவர்களில் ருக்மணி ஸத்யபாமா இவர்கள் ஸாக்ஷாத் லக்ஷ்மியின் அவதாரங்களேயாவார்கள். மற்ற ஆறுபேர்கள் லக்ஷ்மீதேவியின் ஆவேசம் பெற்றவர்களாதலால் இவர்கள் பகவானைச் சேர்ந்தவர்களேயாவார்கள். 31. ஒரு சமயம் பகவானைப்பார்க்க த்வாரகையில் ரைவத பர்வதத்தில் அநேக ராஜாக்கள் குருபாண்டவாதிகள் கூடியிருக்கும்பொழுது அந்த ஸபையின் நடுவில் ஸ்ரீ கிருஷ்ணர் ருக்மணியுடன் வீற்றிருக்கையில் நாரதர் ஆகாயத்தினின்றும் வந்திறங்கி பகவன்! நீர் ஸர்வோத்தமமானதால் ஆச்சரியமானவர் நீர் தன்யர் என்று சொல்ல அதற்கு ஸ்ரீ கிருஷ்ணர் தக்ஷிணைபில்லாகம் நான் ருக்மணியுடனிருப்பதால் இந்த வார்த்தையை ஒப்புக்கொள்ளுகிறேனென்றார். இதன் அர்த்தத்தை விளங்கச் சொல்லும்படி கேட்க நாரதர் "நான் கங்கையில் ஓர் பெரிய ஆமையைக்கண்டு அதிசயித்து நீ உத்தமன் உன்னைவிட உத்தமனில்லை என்ற எண்ணத்துடன் நீ தனியன் ஆச்சரியனென்றேன். அந்த கூர்மம் எனக்கு ஆதாரமாயுள்ள கங்கை தன்யள் ஆச்சரியமானவள் என்றது. அந்த கங்கையை நான் இவ்வாறு சொல்லவும்" அவள் தனக்கு பதியான ஸமுத்ராபிமானியான வருணபகவான் தன்யர் ஆச்சரியரென்றாள். வருணர் தமக்கு ஸமானமானவர்களும் உத்தமர்களுமான தேவதைகளை தரித்த ப்ருதிவி எனப் பெயர் கொண்ட பார்வதி தன்யள் ஆச்சரியமானவள் என்றாள்.

(தொடரும்).



# ஸ்ரீமத்வமத கிரந்தங்கள்.

(முன் தொடர்ச்சி.)

## 41. லிங்கேரி ஸ்ரீனிவாஸாசாரியார், யாதவாசாரியாரின் சிஷ்யர். (ஸோமதீந்திரமடம்.)

318. ப்ரமாணலக்ஷணடிப்பணி.
319. கதாலக்ஷணடிப்பணி.
320. உபாதிகண்டனடிப்பணி
321. மாயாவாதகண்டனடிப்பணி.
322. மித்யாத்வானுமானகண்டனடிப்பணி.
323. தத்வஸங்க்யானடிப்பணி.
324. தத்வவிவேகடிப்பணி.
325. தத்வோத்யோதடிப்பணி.
326. கர்மநிர்ணயடிப்பணி.
327. தத்வநிர்ணயடிப்பணி.
328. மகாபாரதம் 1—10 பர்வம் டிப்பணி.
329. பாகவதவ்யாக்யானம்.
330. ஸித்தாந்தப்ரயாணியாயஸுதா டிப்பணி.
331. ஸங்கிரஹராமாயணடிப்பணி.
332. அணுவேதாந்தவ்யாக்யானம்.
333. மணிமஞ்ஜரிடிப்பணி.
334. தத்வவாதகண்டாபரணபௌத் திக்காரம்.
335. ஸ்மிருதிமுக்தாவளி.
336. சக்ரமீமாம்ஸா.
337. ருக்மணீஹரணம்.
338. ஆசௌசநிர்ணயம்.
339. பதார்த்தஸங்கிரஹம்.

## 42. உமர்ஜி ப்ரஹ்லாத கிருஷ்ணாசாரியார்.

340. ப்ரமேயதீபிகாடிப்பணி.
341. கீதாபாஷியடிப்பணி.
342. தத்வநிர்ணயடிப்பணி.
343. தைத்திரீயடிப்பணி.
344. பிருஹதாரண்யகடிப்பணி.
345. காடகவிவரணம்.
346. தர்க்கதீபாவளி முக்தாவளி டீகை.
347. ஆதர்வணடிப்பணி.
348. பஞ்சசுலோகிதாரதம்ய டிப்பணி.
349. வாதாவளிடிப்பணி.
350. ஸுதாடிப்பணி.
351. கிருஷ்ணஜயந்திநிர்ணயம்.
352. சிரவணஉபவாஸ ப்ரமாண ஸங்கிரஹம்.
353. வ்யூடல்சதுர்தாசலோகசதுஷ்டயவ்யாக்யானம்.

## 43. பீதருஹள்ளி ஸ்ரீனிவாஸதீர்த்தர், யாதவாசாரியாரின் சிஷ்யர் (உத்தராதிமடம்.)

354. தத்வஸங்க்யானடிப்பணி.
355. தத்வவிவேகடிப்பணி.
356. தத்வோத்யோதடிப்பணி.
357. மாயாவாதகண்டனடிப்பணி.
358. உபாதிகண்டனடிப்பணி.
359. மித்யாத்வானுமானகண்டனடி-

360. தத்வநிர்ணயடிப்பணி.
361. கதாலக்ஷணடிப்பணி.
362. பிரமாணலக்ஷணடிப்பணி.
363. கர்மநிர்ணயடிப்பணி.
364. பிரமேயதீபிகாடிப்பணி.
365. ஸுதாடிப்பணி (த்யக்தஸ்ரீனிவாஸதீர்த்தீயம்.)
366. நியாயதீபிகாடிப்பணி.
367. நியாயாமிருதடிப்பணி.
368. ஈசாவாஸ்யடிப்பணி.
369. மாண்டூக்யடிப்பணி.
370. ஆதர்வணடிப்பணி.
371. தைத்திரீயடிப்பணி.
372. ஐதரேயடிப்பணி.
373. ஷட்ப்ரச்னடிப்பணி.
374. ரிக்பாஷியடிப்பணி.
375. பாகவததாத்பர்யவ்யாக்யானம்.
376. ஸதாசாரஸ்மிருதிவ்யாக்யானம்.
377. அனுபாஷியவ்யாக்யானம்.
378. தத்வப்ரகாசிகாடிப்பணி.
379. காதாவளிடிப்பணி.
380. பேதோஜ்ஜீவனடிப்பணி.
381. ஆன்ஹிககௌஸ்துபம்.
382. புருஷஸூக்தார்த்தம்.
383. வாயுஸ்துதிவ்யாக்யானம்.
384. தந்திரஸாரடிப்பணி
385. பாகவத 11 ஸ்கந்தவ்யாக்யானம்.
386. அதிகரணார்த்தஸங்கிரஹம்.
387. பிரமாணபத்ததிடிப்பணி.
388. விஷ்ணுதத்தகண்டார்த்தஸங்கிரகம்.
389. தாத்பர்யநிர்ணய வியாக்யானம்.

44. சர்க்கரா ஸ்ரீனிவாஸதீர்த்தர். (யாதவாசாரியாரின் சிடர்)
390. பேதோஜ்ஜீவனடிப்பணி.
391. தத்வப்ரகாசிகாடிப்பணி (வாக்யார்த்தமஞ்ஜரி.)
392. ஷட்ப்ரச்னடிப்பணி.

45. குர்ஜர் ஸுப்ரம்மண்யாசாரியார், (யாதவாசாரியாரின் சிடர்.)
393. சந்திரிகாவ்யாக்யானம்.
394. நரஸிம்ஹஸ்துதிவ்யாக்யானம்.

46. ஆயி நரஹர்யாசாரியார், (யாதவாசாரியாரின் பரம்பரா சிடர்.)
395. கீதாவிவிருதி.
396. மத்வஸித்தாந்தஸாரம்.
397. அனுபாஷ்யவ்யாக்யானம்.

47. ஆயி ஸத்யநாதாசாரியார்.
398. விஷ்ணுதத்வநிர்ணயடிப்பணி.
399. ஸுதாடிப்பணி விஷமவாக்யார்த்தம்.
400. பாகவதசுருதிகீதாவ்யாக்யானம்.

48. ஆயி நரஸிம்மாசாரியார்.
401. ஸூத்ரார்த்தம்.

49. நரஸிம்ஹாசாரியார் (வித்யாதீச தீர்த்தரின் சிஷ்யர்.)
402. பாவசந்திரிகாதத்வஸங்க்யானடிப்பணி.
403. தத்வோத்யோதடிப்பணி.
404. மாண்டூகேடிப்பணி.
405. ஷட்ப்ரச்னடிப்பணி.
406. காடகடிப்பணி.

(தொடரும்.)

---



மதராஸ் ஹைகோர்ட் ட்ரான்ஸ்லேடர் ஸ்ரீமான் C. J. ராமச்சந்திராச்சாரியார், எழுதுவதாவது:—

## ஓர் கண்டனம்.

அத்வைதிகளுடைய மதத்தில் ஜீவேசுவரர்களுக்கு பேதம் கிடையாது. என்றால் பிரம்மமும் ஜீவன்களான மனிதன், ஆடு, மாடு, கழுதை, குதிரை, சுவானம், குரங்கு முதலிய ஜீவன்களும் ஒன்றுதான். அபேதத்தைக்கொண்டாடும் ஜீவராசிகளில் போலகம் ஸ்ரீராமசாஸ்திரிகள் ஒருவர். இவருடைய மதத்தின்படி பிரம்மத்திற்கும், மேற் கூறிய ஜீவஜந்துக்களுக்கும் வித்தியாசம் இல்லை. அஹம் பிரம்மா ஸ்மி நான் பிரம்மமே என்று உபாஸிப்பவரான ஷெடி சாஸ்திரிகள் அஹம்கர்தபோஸ்மி நான் கழுதை என்று சொல்லிக்கொண்டாலும் அவருடைய மதப்படி அது சரி எனலாம். இப்படி எல்லாவற்றையும் ஒன்று என்று கூறுபவர்களுள் ஒருவரான ஷெடி சாஸ்திரிகள் மத்வாவதாரலீலா மாஹாத்மியமென்னும் சுகந்தத்தை அறியமுடியாமல் ஸாத்விக ஜீவர்களை தெரிந்தோ தெரியாமலோ நாகபாதிரைக்குக் கொண்டு போக மாயாவாதமென்னும் வலையை ஆர்யதர்ம பத்திரிகையின் மூலமாக விரிக்கின்றார். கபிசார்வபௌமனுக்கும் மற்றெல்லோருக்கும் அபேதத்தைக் கூறும் சாஸ்திரிகளிடத்திலிருக்கும் பகுத்தறிவின்மை என்னும் தோஷத்தை நீக்கி அவருக்கு மத்வாவதாரலீலா மகாத்மியமென்னும் நல்ல வாசனையை யறியும் சக்தியை நமது கபிசார்வபௌமனாகிய ஆஞ்சனேயன் அளிப்பாராகில் அது எனக்கு சம்மதமே. ஷெடி சாஸ்திரியார் முக்தியோக்கிய ஜீவராயிருந்து பிராரப்த கர்மத்தினால் அத்வைதியாயிருந்தாலும் நம்முடைய கபிசார்வபௌமனுடைய அனுக்கிரஹத்தால் ஜன்மாந்திரத்திலாவது நல்ல ஞானத்தை அடையப்படும்.

துரந்த துர்மதத்வாந்த வித்வம்ஸன விசக்ஷண:
வித்யோததேமே ஹ்ருதயே ஸத்யத்யான ப்ரபாகர:

இந்த சாஸ்திரிகள் ஆரிய தர்ம பத்திரிகைகளில் மத்வாவதாரகத்புத லீலா ரகசியங்கள் என்னும் தலைப்பின் கீழ் வெளிப்படுத்தியிருக்கும் விஷயங்களிலுள்ள அற்புத ரகசியங்களை யோசித்தால்

அவை எந்த எண்ணத்துடன் வெளிவந்தனவென்று புத்திமான்களுக்கு விளங்குமாதலால் ஷை சாஸ்திரிகளின் வார்த்தைகளிலுள்ளவைகளை முதலில் வெளியிடுகின்றேன்.

1. ஷை சாஸ்திரிகள் ஆர்யதர்ம பத்திரிகையின் 1066-வது பக்கத்தில் மாத்வ பாஷ்யத்திற்கு வியாக்கியானம் செய்தவர்களால் "ஸ்வகீய க்ரந்தஸ்ய ஆர்ஷத்வம் த்யோதயிதும் அபக்த சப்தம் ப்ரயுங்க்தே" தனது கிரந்தம் ஆர்ஷம் அதாவது ரிஷி[illegible]தம்மால் செய்யப்பட்டது என்று தெரிவிக்கும் பொருட்டே அபத்த சப்தத்தை ஆசாரியார் பிரயோகித்திருக்கிறார்" என்று எழுதியிருக்கிறார். எந்த வியாக்யான கிரந்தத்தில் ஷை பிரயோகம் இருக்கிறதென்று சொல்லாமல் பொதுவாக வியாக்கியானகர்தாக்களால் பிரயோகிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்வது ஒப்புக்கொள்ளத்தகுந்ததன்று. பரமதாசாரியர்களை தூஷிப்பதற்குப் போதுமான பலம் பெற உத்தேசித்தே சாஸ்திரியார் அபத்தத்தை (பொய் பேசுவதை) கைக்கொண்டார் போலும். பிரத்தியக்ஷாதி பிரமாண சித்தமான ஜகத்தையே மித்யை என்று சொல்லி எந்த பிரமாணத்திற்கும் அகோசரமான நிர்குண ப்ரம்மத்தைக் கல்பனை செய்துகொண்டிருக்கும் அத்வைதமதத்தை அவலம்பித்திருக்கும் சாஸ்திரிகளுக்கு இந்த வாக்கியங்களின் கல்பனை பொருத்தமானதுதான். அப்படியே 1070--1071 வது பக்கங்களில் பாஞ்சராத்திரத்தின் அப்பிராமாண்யத்தை விளக்குவதற்காக "உத்பத்யஸம்பவாத்" என்னும் பிரம்மசூத்திரம் புறப்பட்டதாகவும், பாஞ்சராத்திரம் பிரமாணமென்று சொல்லும் மத்வாசாரியார் தனக்கு அனிஷ்டமான சாக்த மதத்தைக் கண்டிக்கும் வியாஜத்துடன் மேற்படி சூத்திரத்திற்கு "நஹிபுருஷானனுகிருஹீதஸ்திரீப்ய." என்றால் கணவனுடைய அனுக்கிரகம் (சகாயம்) இல்லாமல் உற்பத்தியுண்டாகுமா என்று அர்த்தம் சொன்னதாகவும் அதற்கு சாஸ்திரிகள் பாரியையின் சகாயமன்னியில் புருஷனுக்கு பிரஜைகள் உண்டாகுமா, என்ற பிரச்னைவராதா என்று அபஹாஸ்யம் செய்வதுபோல் கேட்டிருப்பது ஷை சாஸ்திரிகள் வேதாந்தமறிந்தவரல்லவென்பதை விளக்குகின்றது. ஏனெனில் வைதிக மதாவலம்பிகள் எல்லோருக்கும் ஸர்வசாதாரணமாய் தெ-



ரிந்திருக்கும் அஜஸ்ய நாபாவத்யேகமர்பிதம் யோப்ரம்மாணம் விததாதிபூர்வம் முதலிய சுருதிகளால் ஸ்திரீ சகாய மன்னியில் புருஷனுக்கு பிரஜோத்பத்தி செய்யும் சக்தியுண்டென்று அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. தவிரவும் மஹாபாரதம், பாகவதம் முதலிய இதிஹாஸ, புராண கிரந்தங்களிலும் இக்ஷ்வாகு, மாந்தாதா, துரோணர், துருபதராஜன் முதலியவர்களுக்கு ஸ்திரீ சகாயமன்னியில் பிரஜைகள் உண்டாயிற்றென்று சரித்திரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதை எல்லோருமறிந்தவிஷயமே. வேதம், புராணம், இதிஹாஸம், இவைகளை மேல்வாரியாய்கூட இந்த சாஸ்திரிகள் பார்க்கவில்லை எனலாம்.

3. ஷை சாஸ்திரியார் 1008—1012 வது பக்கங்களில் மகானான வெங்கடாத்வரி விச்வகுணாதர்ச சம்புவில் அறிவித்தபடி மாத்வர்கள் பிஷ்டபசுவினால் யாகம் செய்வது உசிதமே என்றும் மாத்வர்கள் ஏகாதசியில் இரண்டு வேளைகளில் ஹோமம் செய்யாமலிருப்பதால் அவர்களுடைய அக்னி லௌகிகாக்னியாய்ப் போய்விடுவதால் பசு ஹோமம் செய்வதால் பசுவதம் செய்த தோஷம் வந்து சேருமென்பதற்காக அவர்கள் ஸரியான யாகத்தைச் செய்யாமல் யாகம் செய்கிறவர்கள்போல் நாடகம் நடிப்பதாகவும் பெண் குழந்தைகள், மரப்பாச்சி, மண் பாத்திரங்கள் முதலியவைகளை வைத்துக்கொண்டு வயதுவந்த பெண்டிர்களைப் போல் தாமும் சமையல் செய்வதும் சாப்பிடுவதுமாகிய பாவனை காட்டுவதுபோல் அத்வைதிகள், விசிஷ்டாத்வைதிகள் முதலியோர் யாகம் செய்வதுபோல் தாமும் யாகம் செய்வதாக பாவனைகாட்டி மாவினால் பசு செய்து யாகம் செய்கிறார்கள் என்றும் இது எல்லோருக்கும் பிரசித்தமான விஷயமென்றும் எழுதியிருக்கிறார். பிஷ்டபசு செய்து அதைக்கொண்டு யாகம் செய்யவேண்டுமென்று ஸ்ரீமன் மத்வாசாரியார் சொல்லியிருப்பதாக எழுதத்துணிந்த சாஸ்திரியார் ஸ்ரீ மத்வாசாரியார் எந்த கிரந்தத்தில் எந்த பாகத்தில் எழுதியிருக்கிறாரென்று எழுதகூடவில்லை. மேற்கூறிய விஷயத்திற்கு மத்வாசாரியரால் கூறப்பட்டதான ஆதாரம் அவரால் காட்டப்படும் வரையில் ஷை சாஸ்திரியாரின் சொற்கள் பொய்யானவைகளென்றே தீர்மானிக்கவேண்டும். ஸ்ரீமன்

மத்வாசாரியார் தம்முடைய எந்த கிரந்தங்களிலேயும் இவ்வாறு சொல்லவில்லை. இப்படிப் பொய்யான கதைகளை எழுதி பத்திரிகையின் பக்கங்களை நிறப்புவதற்கு சாஸ்திரிகளை போன்றவர்கள் அவசியமில்லை. பித்தம் தலைக்கேறியவன் எவனுமே எழுதலாம். ஸ்மிருதி சந்திரிகையில் பின் வருமாறு பிரமாணமிருக்கின்றது. "ஏகாதச்யாம் ககாதீச நஹோதவ்யம் கதாசந|" ஹவிஷோ கர்ஹிதத்வாத்ஹி நசிருண் ஹந்திஸந்ததய:| பிருஹந்நாரதீயத்தில் "ந ஹோதவ்யம் நஹோதவ்யம் ஏகாதச்யாம் கதாசன| ஜுஹுயாத்யதி மூடாத்மா ஆபானேர் நரகம் வ்ரஜேத்". வாராஹத்தில் ஏகாதசிப்ரகரணத்தில் "நசிராத்தம் தத்ரகுர்வீத நஹோமம் நச தர்பணம்" பஞ்சராத்ராகமத்தில் "திலோதகம் பிண்டதானம் சிராத்தம் ஹோமம் சதர்பணம்,| திலதானம் சான்னதானம் நகுர்யாத் ஹரிவாஸரே" என்று இத்தியாதிஸ்மிருதிகளாலும் "ஏதஸ்மின் ப்ரம்மதிவஸே நாக்னிம் ஜுஹுயாத் ச்ரராத்தம் குர்யாத் நகிமபி தஸ்மாத்யதி ஹவாதர்பயேத் ஜுஹுயாத் சிராத்தம் தத்யாத்ஸ சண்டாள: ஸபித்ருஹா ஸமாத்ருஹா ஸதேவஹா ஸஸர்வதாபவதீதி" இதுமுதலான சுருதிகளாலும் ஏகாதசி ஹோமம் நிஷேதிக்கப்பட்டிருப்பதால் மாத்வர்களின் அக்னி லௌகிகமாகாமல் எப்பொழுதும் வைதிகமாகவே யிருக்கின்றது. ஏகாதசியன்று யாகம் ஹோமம் முதலிய காரியங்கள் நிஷேதிக்கப்பட்டிருந்தபோதிலும் அந்த திதியில் அவைகளைச் செய்து பதிதர்களாகும் அத்வைதிகளுடைய அக்னியேதான் லௌகிகமாகிவிடுகின்றது. ஆனபோதிலும் சக்தி பூஜையின் சேஷமான மத்யத்தை பானம் செய்வதற்கு உதவியாக மாம்சம் வேண்டியிருப்பதால் யாகமென்று பெயர் வைத்துபசுவதம் செய்து அதன் மாம்சத்தை சாப்பிடுகிறார்களேயொழிய ஈஸ்வராராதன ரூபமாக அதைச்செய்வதில்லை எனலாம். "குர்யாத்க்ருதபசும் ஸங்கே குர்யாத் பிஷ்டபசும் ததா! நத்வேவது விருதா ஹந்தும் பசுமிச்சேத்கதாசன (மனுஸ்மிருதி 5வது அத்தியாயம் 37-வது சுலோகம்.) இத்தியாதி ஆதாரங்களாலும் அநேக வேதவாக்யங்களாலும் ஸ்ரீமன் மஹாபாரதத்தில் உபரிசரவஸு சரித்திரம் முதலிய உபாக்யானங்களாலும் பிஷ்ட பசுவே சாஸ்திரீயமென்று விஜயீந்திரஸ்வாமிகள் முதலிய முன்னோர்கள் அப்பைய தீக்ஷிதர் முதலிய துர்வாதிகளைக் கண்டித்து சித்தாந்தம் செய்திருக்கிறார். இந்த பிஷ்டபசு விசாரம் முன்பே மாத்வமித்திரனில் பிரசுரமடைந்திருக்கிறது.

(தொடரும்.)



# ஆசாரமாலை.

(முன் தொடர்ச்சி.)

இவைகளுக்கு எல்லா விரல்களையும் உபயோகப்படுத்தவேண்டும் ஸங்கர்ஷண என்ற பெயரைக்கொண்டு நாஸிகையின் அடிபாகத்தை முஷ்டியின் பின்புறத்தால் அலம்பவேண்டும். வாஸுதேவ என்று கட்டை விரலால் வலது மூக்கையும் ப்ரத்யும்ன என்று ஆள்காட்டி விரலால் இடது மூக்கையும் தொடவேண்டும். அநிருத்த என்று கட்டை விரலால் வலது கண்ணையும் புருஷோத்தம என்று மோதிர விரலால் இடது கண்ணையும் ஜலத்தால் தொட்டு, அதோக்ஷஜ என்று கட்டை விரலால் வலது காதையும் நரஸிம்ஹ என்று மோதிரவிரலால் இடது காதையும் தொடவேண்டும். அச்யுத என்று தொப்பிளை சுண்டுவிரல் மோதிரவிரல், கட்டைவிரல் இவைகளைக்கொண்டு தொடவேண்டும். ஹிருதயத்தை ஜனார்த்தனவென்று உள்ளங்கையாலும் உபேந்திராவென்று சிரஸ்ஸையும் ஹரே என்று வலது புஜத்தையும், ஸ்ரீகிருஷ்ணவென்று இடது புஜத்தையும் எல்லா விரல்களாலும் தொடவேண்டும். ஜபம் செய்யும்பொழுதும் ஸ்மசானத்திற்கு போய்வந்தபொழுதும், வஸ்திரம் உடுத்தபோதும் ஸ்நானகாலத்திலும் தண்ணீர் குடித்த காலத்திலும், தும்மியபின்பும், தூங்கியபின்பும், ஹோமகாலத்திலும், போஜனகாலத்திலும், தெருவாசல் போய் வந்தபின்பும், மலஜல உத்ஸர்ஜனமானபின்பும், இரண்டுதரம் ஆசமனம் செய்யவேண்டும். தானம், ப்ரதிக்ரஹம், ஹோமம், ஜபம், மூன்று ஸந்தியாவந்தனம், பலிஹரணம், இவைகளின் ஆரம்பத்தில் 2 தரமும், முடிவில் ஒரு தரமும், ஆசமனம் செய்யவேண்டும். ஜபம், ஹோமம் இந்த காலங்களில் சண்டாளர்கள் முதலிய துஷ்டர்களைக்கண்டால் ஒவ்வொருதரமும் அர்க்யப்ரதானம் முதலியவைகளுக்கு பின்பு ஸந்தியாவந்தனத்தில் ஒவ்வொருதரமும் ஆசமனம் செய்யவேண்டும். சாப்பிட்டவுடனும் தாம்பூலாதிகளை போட்ட பின்பும் பற்களின் நடுவில் சிக்கியவைகளை ஈருக்கால் எடுக்கமுடியாமல் அங்கு தங்கியிருந்தால் அது உச்சிஷ்டமாகாது. அப்படியே மிருத்திகை தடவியும் போகாமல் வாயிலும் கையிலும் தங்கிய நெய் சிக்கல் முதலியவைகளும் உச்சிஷ்டமாகாது. பல்லில் ஈருக்கு போட்டுதன்னி உள்ளிருந்ததை எடுத்தபின்பும், தும்மியபின்பும், அபானவாயு பிரிந்த பின்பும், மகாபாதகிகளுடன் பேசியபின்பும், வலது காதை எல்லா விரல்களாலும் தொட்டு ச்ரோத்ராசமனம் செய்யவேண்டும். புஷ்கராதிதீர்த்தங்களும், கங்காதிநதிகளும் பிராம்மணனுடைய வலது காதி

விருப்பதாய் மனு அறிவித்திருக்கிறார். அக்னி, வருணன், எல்லா வேதங்கள், சந்திரன், சூரியன், வாயு இவர்களெல்லோரும் பிராம்மணனுடைய வலது காதிலிருக்கிறார்கள். கங்காதி நதிகள் வலது காதிலும், அக்னி நாஸிகையிலும் வசிப்பதால் ஐந்து விரல்களை சேர்த்து இவ்விரண்டையும் தொடுவதால் அக்ஷணமே பாபங்கள் நாசமடைகின்றன. ஜலத்தால் ஆசமனம் செய்யமுடியாமலிருக்கும்போது இந்தவகையான ச்ரவண ஆசமனம் செய்யவேண்டியது. மேற்கு முகமாயிருந்து ஆசமனம் செய்தால் அந்த தோஷம் மீண்டும் ஆசமனம் செய்வதால் நீங்கும். தக்ஷிணமுகமாய் இருந்து ஆசமனம் செய்தால் அந்த தோஷத்தை மீண்டும் ஸ்நானம் செய்து நிவிருத்தி செய்துகொள்ளவேண்டும். ஆசமனமின்றி நாஸ்திகன் செய்யும் காரியம் எல்லாம் வீணாய்த்தானாகுமென்கிறது மற்றொரு ஸ்மிருதி. சுருதியில் விதிதமான காரியங்கள், ஸ்மிருதியில் சொல்லப்பட்ட கர்மாக்கள் இவைகளைச் செய்யும்பொழுது ஆத்யந்தமாய் இரண்டுதடவை ஆசமனம் செய்யவேண்டும்.

**ஸ்நானம்.**

ஸ்நானம் செய்ய தாம்பரபாத்திரம், தர்பம், துளஸீ மிருத்திகை, அல்லது சுத்தமான மண் இவைகளை எடுத்துக்கொண்டு ஜலாசயத்திற்கு சென்று தலைமயிரை முடித்துக்கொண்டு கைகழுவி சுத்தமாகி ஆசமனம்செய்து அன்றைய திதி வாராதிகளைச்சொல்லி ஸங்கல்பம் செய்துகொண்டு அந்த நதியை மந்திரங்களால் ப்ரார்த்திக்கவேண்டும். தாயான நதி அபிமானி தேவதையே! உன் கால், கமலவாய், புஜம், வயிறு இந்த இடங்களில் சிலர் காரி உமிழ்கின்றனர். சிலர் மூத்ரோஸர்ஜனம் செய்கின்றனர். சிலர் வாய் கொப்பளிக்கின்றனர் சிலர் குதிக்கின்றனர். இந்த எல்லா துஷ்டமான ஆசாரணையை க்ஷமித்து என்னை அனுக்ரஹிப்பாய் என்றிவ்வாறு ஸ்தோத்திரம் செய்து அந்த நதியில் பகவந்மூர்த்தியை த்யானம் செய்யவேண்டும். பிரம்மாண்ட புராணத்தில் வசிஷ்டர் சொல்லுவதாவது:— கங்காநதியில் சங்கு சக்ரம் கதா பத்மம் இவைகளை தரித்த மாதவமூர்த்தியை தியானிக்கவேண்டும். கோதாவரி மகா நதியில் சங்கு, சக்ரம், கதை, பத்மம் இவைகளை தரித்த வீரநாராயணனையும், கிருஷ்ணவேணி நதியில் சங்கம், சக்ரம், சாரங்கதனுஸ், சக்தி இவைகளை தரித்து சதுர்பாஹுவான ஸாக்ஷாத் ஜனார்த்தனன் கிருஷ்ணனையும், ஸரஸ்வதி நதியில் பத்மநாப மூர்த்தியையும், யமுனையில் சங்கம் சக்ரம், கதை தனுஸ் இவைகளைக்கொண்ட கிருஷ்ணமூர்த்தியையும், காவேரி நதியில் ஸ்ரீரங்கநாதனையும், ஸரயூநதியில் ஸ்ரீராமசந்திரனையும், நர்மதாநதியில் சதுர்பஹுவான மகாவிஷ்ணுவையும், துங்கபத்திரா நதியில் ஸ்ரீவராகமூர்த்தியையும், ஸிந்து நதியில் க்ஷீராப்திசாயியையும், பாபநாசனியில் ஸ்ரீநரஸிம்ஹனையும், குமுத்வதி நதியில் த்ரிவிக்ரமனையும், பீமாநதியில் ஸ்ரீதரனையும், தாம்பரபர்ணியில் அநந்த பத்மநாபனையும், மலஹாரணியில் ஜனார்த்தனனையும், பினாகினியில் சங்கம், சக்ரம், கதா, பத்மம் இவைகளுடனுள்ள கேசவமூர்த்தியையும் த்யானம் செய்யவேண்டும்.

(தொடரும்.)



# காடகோபநிஷத்.

(முன் தொடர்ச்சி.) இரண்டாவது வல்லி.

பெரிய வஸ்துக்களைவிட மிக்க பெரியவராய் இருக்கிறார். மேற்கூறிய அநாதிநித்யனான ஜீவனுடைய ஹிருதயத்தில் அவனுக்குப்ரேரகனாய் நன்கு வசித்துவருகிறார். அணுவாயிருத்தல் முதலிய குணங்களைக்கொண்டவரும் ஜீவனைவிட குணங்களில் மகத்தான பரிமாணமுள்ளவருமான பகவானை அகாரவாச்யனான விஷ்ணு ஸர்வோத்தமனென்ற நிச்சயமுள்ள புருஷன் விஷ்ணுவின் ப்ரஸாதத்தால் த்யானம் செய்து அவரை நேரில் பார்க்கிறான். அதாவது அபரோக்ஷமடைகிறான். அவருடைய ப்ரஸாதத்தால் துக்கமில்லாதவனாய் ஆகிறான். (21) பகவானுடைய மஹிமையை இன்னமும் சொல்லுகிறார். பரமாத்மா ஓரிடத்தில் உட்கார்ந்தபடியே தூரதேசத்தை அடைகிறார், கீழே படுத்தபடியே எங்குமே நடக்கிறார். அவருக்கு அதிசயமான சாமர்த்தியமிருப்பதால் விருத்தமான காரியங்கள் அவரிடமிருக்கின்றன. ஜீவன்களுக்கு சுகம் துக்கம் இவைகளைத்தரும் க்ரீடாதி குணவிசிஷ்டனான அந்த பரமாத்மாவை என்னைத்தவிர யார் அறிய அருகர். (22) நச்வரமான பிராணிகளின் சரீரத்தில் சரீர நிமித்தமான யாதொரு விகாரமில்லாதவராயிருப்பவரும் தேசம் காலம் குணம் இவைகளால் மகத்தானவரும், ஸமர்த்தனாயிருப்பவரும், ஸர்வஸ்வாமியுமான பரமாத்மாவை அறிந்து புத்திமான் முக்தனாகிறான். (23) சிரவணாதி உபாயங்களாலேயும் அவருடைய ஞானமுண்டாவதால் பரமாத்மாவின் ப்ரஸாதத்தால் ஜீவன் பரமாத்மாவை பார்க்கிறானென்று சொன்னது எப்படி பொருந்துமென்றால் அதற்கு யமன் சொல்லுவதாவது இந்த பரமாத்மா வேதங்களை ப்ரவசனம் செய்வதால் கண்ணிற்படமாட்டார். ஒருவனுக்கு அவனுடைய ஞானபலத்தால் கிடைக்ககூடியவனன்று. வெகுவாய் சாஸ்திர சிரவணாதிகளாலும் கிடைக்ககூடியவனன்று. ஆனால் எவனை இந்த பகவானே தன் பக்தனென்று ஏற்றுக்கொள்ளுகிறாரோ அதாவது யாரிடம் இவர் ப்ரஸாதம் காட்டுகிறாரோ அவனுக்குத்தான்

இந்த பரமாத்மா கண்ணிற்படுகிறார். இந்த பரமாத்மா தன் ப்ரஸாதத்தை அடைந்த அந்த புருஷனுக்குத்தான் தன் சரீரத்தைக்காட்டுகிறார். அப்படிக்கில்லாவிடில் கேவலம் அவ்யக்தமான ஸ்வரூபமுள்ள அந்த பகவான் அவருடைய ப்ரஸாதத்தாலல்லாது கண்ணிற்படுவதெப்படி? (24) அவர் கண்ணிற்படுவது அவருடைய ப்ரஸாதத்தாலேயேயன்றி வேறு எதனாலுமாகாதென்றால் வைராக்யாதி ஸாதனங்கள் ஏன்? அதனால் ப்ரயோஜனமென்ன? என்றால் ப்ரம்மஞானத்தால்தான் அவருடைய ப்ரஸாதம் ஏற்படுமாதலால் அதும் அவசியமென்கிறார். துராசாரங்களினின்றும் திரும்பாத துஷ்டமான ஆசாரமுள்ளவன் ஞானத்தைக்கொண்டு இந்த பகவானை அவருடைய ப்ரஸாதத்தை அடையமாட்டான். சிரவணமனனாதி த்யானங்களால் பகவானிடம் நிஷ்டையில்லாதவன் ஞானத்தைக்கொண்டு பகவானுடைய ப்ரஸாதத்தை அடையமாட்டான். வஸ்துக்களை உள்ளபடிக்கு அறிந்துகொண்ட உண்மையான ஞானமில்லாதவன் ஞானத்தைக்கொண்டு பகவானுடைய ப்ரஸாதத்தை அடையமாட்டான். விஷயபோகங்களில் இவைகளை அனுபவித்தது போதுமென்ற அலம் புத்தியில்லாது விஷயத்தில் ஈடுபட்டவன் ஞானத்தைக்கொண்டு பகவத் ப்ரஸாதத்தை அடையமாட்டான். (25) எந்த பரமாத்மாவுக்கு ப்ராம்மணத்தன்மையாகிய ஜாதியைச்சேர்ந்த வஸ்துக்களும் க்ஷத்திரியத்தன்மையாகிய ஜாதியைச்சேர்ந்த வஸ்துக்களும் சாப்பிடும் அன்னமாக இருக்கிறதோ ப்ராம்மண க்ஷத்திரியர்களை ஆகாரமாகக் கொண்டவரான எல்லா ப்ராணிகளையும் ஸம்ஹரிக்கும் ம்ருத்யுவும் எந்த பகவானுக்கு அன்னத்தை சாப்பிடும்பொழுது வாயில் தொட்டுக்கொள்ளும் கறிகாய்களாய் இருக்கின்றனவோ, அப்பேர்பட்டவரான ஜகத் ஸம்ஹாரம் செய்யும் குணமுள்ள மகா பலவானாகிய பகவான் இவ்வாறு எங்கிருக்கிறாரென்பதை யார் அறிவார். அவருடைய இருப்பிடத்தை ஒருவருமறியார். அவரவர்களின் யோக்யதையை அனுசரித்து சிறிது சிறிது அறிவார்களேயன்றி பூராவாய் அறிவதில்லை, என்றார் நசிகேதஸ்ஸைப்பார்த்து யமதேவன்.

இரண்டாவது வல்லி முடிந்தது.



## மூன்றாவது வல்லி.

---

இதற்கு முன் அத்யாயத்தில் 12-வது மந்திரத்தில் த்யானமாகிய உபாயமுண்டென்று பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்த த்யானத்தை எந்த அதிஷ்டானத்தில் எப்படிச் செய்யவேண்டுமென்பது இங்கு சொல்லப்படுகிறது. புண்ய கர்மாவால் நிர்மாணம் செய்யப்பட்ட இந்த மனுஷ்ய சரீரத்தில் ஹிருதய குகையில் பிரவேசித்திருப்பவர்களும் அங்கும் ஸர்வ ஜீவோத்தமரானவும் இதரர்களான ருத்திராதிகளைவிட அதிகமாய் பக்தி ஞானாதிகளால் பூர்ணராய் அபிவிருத்தியை அடைந்திருக்கும் முக்யப்ராணரிடம் ப்ரவேசித்திருப்பவர்களும் ஸுக்ருத பலத்தையே அனுபவிப்பவர்களுமான ஆத்மா அந்தராத்மா எனப்படும் இரு விஷ்ணு ரூபங்களை பிரம்மஞானிகள், தேவயக்ஞம் பித்ரு யக்ஞம் பூதயக்ஞம் மனுஷ்யயக்ஞம் ப்ரம்மயக்ஞம் ஆகிய பஞ்சமகா யக்ஞங்களுள்ளவர்களாய் அல்லது சாந்தோக்யத்தில் சொன்னபடி த்யு, பர்ஜன்யர், தரா, புருஷன் ஸ்திரி இந்த ரூபங்களான பஞ்சாக்னியில் நிஷ்டர்களாய் மூன்றுதரம் நாசிகேதாக்னி சயனம் செய்தவர்களாய் சாதுக்களுக்கு ஸுகத்தையும் அஸாதுக்களுக்கு துக்கத்தையும் கொடுக்கும் சாயை ஆதபம் (நிழல், வெய்யில்) இவைகளைப்போலுள்ளவர்களென்று சொல்லுகின்றனர். எந்த ஆத்மா அந்தராத்மா என்றிரண்டு ரூபங்களுள்ள பகவான் அவரைக்குறித்து தவம் செய்கிறவர்களுக்கு எல்லையாயுள்ளவரோ ஸம்ஸார ஸமுத்ரத்தைக்கடக்க விருப்பங்கொண்டவர்கட்கு பயத்தை பரிகரித்து ஸம்ரக்ஷணை செய்யும் கரையாயுள்ள மோக்ஷத்தை அளிப்பவரோ நாசமற்றவரான அந்த பரப்ரம்மமாகிய பகவானை த்யானம் செய்யும் வகையை நசிகேதருக்கு உபதேசம் செய்ய நாம் சக்தர்கள்; என்றால் நாம் இப்பொழுது அவருக்கு உபதேசம் செய்யப்போகிறோமென்றார் யமதேவன். (3) சரீரத்தின் உள்ளே வியாபித்திருக்கும் ஜீவனை ஓர் ரதத்தின் அதிபதி என்றறிந்துகொள்ளுங்கள். ரதம் யாதென்றால் சரீரத்தையே ரதமாக அறிந்துகொள்ளும். புத்தியை அந்த ரதத்தை நடத்தும் ஸாரதியாய் அறிந்துகொள்ளும். மனதை குதிரைகளை அடக்

கும் லகானுப் அறிந்துகொள்ளுநம். (4) ஞானிகள் கண் காது முதலான இந்திரியங்களை இந்த சரீரமாகிய ரதத்திற்கு குதிரைகளென்று சொல்வார்கள். ரூபம் ரஸம் முதலான இந்திரிய விஷயங்களை அந்த இந்திரியக்குதிரைகள் சஞ்சரிக்கக்கூடிய ப்ரதேசங்களென்று சொல்வார்கள். இந்திரியம் மனஸ் முதலானவைகளுடனுள்ள ஜீவனை ஸுகதுக்கங்களை அனுபவித்து உத்தமத்வம் நீசத்வம் இவைகளை அடைகிறவனென்று சொல்வார்கள். (5) எவன் எப்பொழுது நிக்ரஹம் செய்துகொள்ளாத மனதுடன் விவேகமில்லாமலிருக்கிறானோ அந்த புருஷனுக்கு ஓர் ஸாரதிக்கு துஷ்டத்தனமடைந்த குதிரைகளைப்போல் இந்திரியங்கள் ஸ்வாதீனமாவதில்லை (6) எவன் எப்பொழுதும் மனதை நிக்ரஹம் செய்துகொண்டு விவேகியாயிருக்கிறானோ அவனுக்கு ஓர் ஸாரதிக்கு நல்ல குதிரைகளைப்போல் இந்திரியங்கள் ஸ்வாதீனமாகின்றன. (7) எவன் விவேகமென்ற புத்தியாகிய ஸாரதியில்லாதவனாயிருக்கிறானோ மனதை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளாமலிருக்கிறானோ எப்பொழுதும் விஷயங்களில் ஈடுபட்டிருந்து அசுத்தனாயிருக்கிறானோ அவன் பரப்ரஹ்ம சொரூபத்தை அடைவதில்லை. ஸம்ஸாரத்தையே அடைந்து கஷ்டப்படுகிறான். (8) எவன் புத்தியாகிய ஸாரதியுள்ளவனாய் மனோநிக்ரஹமுள்ளவனாய் எப்பொழுதும் விஷயத்தில் ஈடுபடாமல் பரிசுத்தனாய் இருக்கிறானோ அவன் ப்ரஹ்மஸ்வரூபத்தை அடைகிறான். அவன் அந்த பகவத் ஸ்தானத்தை அடைந்து மீண்டும் பிறந்து ஸம்ஸாரத்திற்கு திரும்பி கஷ்டப்படுவதில்லை. (9) எவன் விவேகத்தை ஸாரதியாய் செய்துகொண்டு மனதாகிய லகானை ஸ்வாதீனம் செய்துகொண்டு இந்திரியங்களாகிய குதிரைகளையும் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு இருந்துவருவானோ அவன் ஸம்ஸாரமாகிய பாதையின் எல்லைப் புறமாகிய, பரமாத்மா ஸ்ரீவிஷ்ணுவின் மேலான ஸ்வரூபத்தை அடைகிறான். (10) பகவானுடைய த்யானம் தாரதம்யப்படி செய்யவேண்டுமாதலால் அது சொல்லப்படுகிறது. ச்ரோத்ரம் த்வக், சக்ஷுஸ், ஜிஹ்வை, க்ராணம், வாக், பாணி, பாதம், பாயு, உபஸ்தம், ஆகிய ஞானேந்திரியம் கர்மேந்திரியம் இவைகளைவிடவும் இவைகளின் அபிமானி தேவர்களான சந்திரன், குபேரன், சூரியன், வருணன், அசுவினீ தேவர்கள், அக்னி, இந்திரன், ஜயந்தன், யமன், தக்ஷன், இவர்களைவிடவும் ச்ரோத்ராதி இந்திரியங்களின் விஷயங்களான சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம். கந்தம் இவைகளும் இவைகளின் அபிமானிகளான ஸௌபர்ணி, வாருணி, பார்வதி ஆகிய தேவிகள் உத்தமமானவர்கள்.

(தொடரும்.)



# ஸ்ரீமஹாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(ஸ்ரீமத். வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.)

(காபி ரைட்) முன் தொடர்ச்சி.

## பதினொன்றாவது அத்யாயம்.

### குருகுலவாஸம்.

பிருந்தாவனத்தில் யசோதாதேவியுடன் சேர்ந்து ஸ்ரீகிருஷ்ணனை தியானம் செய்துகொண்டு வாஸம் செய்தான். ஸ்ரீகிருஷ்ணன் ஸம்பூர்ணமான ஞானமுள்ளவனாயினும் தேவர்களுக்கு தர்மசிக்ஷையை செய்வதற்காக அவந்தி நகரத்திலிருந்த ஸாந்தீபினி ஆசாரியாளிடம் பலராமனுடன்போய் அவரிடமிருந்து நான்கு வேதங்களையும் ஸகல வித்தைகளையும் அவர் ஒருதரம் சொன்னமாத்திரத்தில் கற்றார். ஸர்வக்ஞர்களான தேவர்கள் மனுஷ்யர்களில் அவதாரம் செய்தால் மனுஷ்யர்களைப்போல் நடிக்கவேண்டும்; அவர்களின் ஞானம் பலம் இவைகளை மறைந்துக்கொள்ளவேண்டும்; குருமார்களிடம் அத்யயனாதிகளைச் செய்யவேண்டும்; இது தேவர்களின் கடமை என்று அறிவிக்க பகவான் ஸ்ரீகிருஷ்ணன் குருகுலவாஸம் செய்தார். ஸ்ரீகிருஷ்ணன் குருதக்ஷிணைக்காக குருவின் இறந்துபோன மகனை உயிர்ப்பித்து அவரிடம் கொணர்ந்து கொடுத்தார். ஸமாநாயகனை ஸ்ரீகிருஷ்ணன் பலராமனுடன்கூடி மதுராபட்டணத்திற்கு அவந்திபுரத்திலிருந்து திரும்பி வந்தார்.

### பிரஜா பரிபாலனம்.

தேவகி வஸுதேவர்களுக்கு அவர்களின் இஷ்டங்களைச் செய்துகொண்டு நாடு முழுமையும் பரவியிருந்த பந்துக்களுள்ள அம்மதுரைமா நகரத்தார்களால் தினம் ஆராதிக்கப்பட்டவராய் வசித்துவந்தார். முன்பு கம்ஸனால் சங்கடப்பட்ட எல்லா யாதவர்களும் ஸ்ரீகிருஷ்ணனை தலைவனாய் அடைந்து விசேஷமான ஆனந்தத்தை அடைந்தனர். ஸகல ஸாதுஜனங்களுக்கு ஸ்ரீகிருஷ்ணன் ஸ்வாமியாக ஆனதற்கு சந்தோஷமேற்பட்டிருக்கும்பொழுது தேவகி வஸுதேவர்களுக்கு மகான் மகனாய் ஆனதால் சந்தோஷமுண்டாயிற்றென்று சொல்லவும் வேண்டுமோ. எந்த

இடத்தில் ஸ்ரீகிருஷ்ணபக்தர்களான ஜனங்கள் வசிக்கின்றனரோ அந்த இடத்தில் மகா ஐசுவரியம் விருத்தியடைகின்றது. லக்ஷ்மீபதியான ஸ்ரீகிருஷ்ணனே வாஸம் செய்யும் இடத்தில் ஸம்பத்விருத்தி என்று சொல்வானேன். ஸ்ரீகிருஷ்ணன் வாஸம் செய்ததால் பிருந்தாவனமென்ற வனம் இந்திரனுடைய இருப்பிடமான ஸ்வர்க்கத்திற்கு முற்றிலும் ஸமானமாய் ஆகிருக்க மதுரா நகரத்தில் ஸம்பத் விருத்தியடைந்ததென்று சொல்வானேன். ஜகத்திற்கு ப்ரபுவான விஷ்ணு ப்ரம்மலோகத்தில் வாஸம் செய்வதால் ஸத்யலோகத்திற்கு உத்தமத்வம் வந்திருக்கிறது. அந்த காரணத்தைக்கொண்டு ப்ரபுவான கிருஷ்ணர் எப்போதும் வாஸம் செய்வதால் மதுராபட்டணம் ஸ்ரீமான்களால் நிறைந்ததாய் ஆயிற்று.

## ஜராஸந்தனை வென்றது.

மூவுலகத்திற்கும் ரக்ஷகனான கிருஷ்ணன் எல்லா யாதவர்களையும் ரக்ஷணம் செய்துவருங்கால் ஜராஸந்தனுடைய பெண்மக்களான அஸ்தி ப்ராஸ்தி இருவர்கள் அவர்களின் புருஷனான கம்ஸனுக்கு கிருஷ்ணனால் மரணம் ஏற்பட்ட விருத்தாந்தத்தை ஜராஸந்தனருகில் சென்று மிகுந்த துக்கத்துடன் அறிவித்தனர். உத்கிருஷ்டமாயும் ப்ரௌடமாயுமுள்ள பாஹுக்களின் பலத்தைக்கொண்டதால் யுத்தத்தில் எல்லா ஜனங்களால் தோற்கடிக்கப்படாதவனும், பிரம்மா, ருத்திரன் சண்டகௌசிகமுனி இவர்கள் தந்தவரத்தால் ஜயிக்கமுடியாதவனும், மிருத்யு இல்லாதவனும், உலகத்தை ஜயித்தவனுமான மகததேசாதிபதி ஜராஸந்தன் தன் பெண்கள் சொன்ன இந்த துக்க விருத்தாந்தத்தைக்கேட்டு கோபித்தான். கோபம் அதிகரித்து அவனுடைய மனம் கலங்கியது. ஸம்பூர்ணமான சைவாகமத்தை அறிந்தவனும் சிவபக்தர்களால் வணங்கப்படுகிறவனுமான ஜராஸந்தன் பரமசிவன் கொடுத்த அமோகமான கதாயுதத்தைக் கையிலெடுத்தான். அவனுடைய நகரத்தில் இருந்தபடியே ஸ்திரமாய் நின்றுகொண்டு, காரியத்தை ஸாதித்துக்கொடுக்கும் அந்த கதாயுதத்தை ஸ்ரீகிருஷ்ணனைக்கொல்வதற்காக நூறுயோஜனைதூரம் கணக்கிட்டு



சுழற்றி வேகமாய் விட்டெறிந்தான். அந்த கதை மதுராபட்டணத்திற்கு வெளியில் ஒரு யோஜனைக்கு இப்பாலேயே விழுந்தது. அவ்வாறு ஏன் விழுந்ததென்றால் ஜராஸந்தன் அந்த கதையை மேலே சுழற்றிக்கொண்டிருக்கையில் தேவரிஷியான நாரதரைப் பார்த்து மதுராபட்டணம் தன் ஊரிலிருந்து எத்தனை யோசனை தூரமென்று கேட்டான். அப்பொழுது நாரதர் ஸ்ரீகிருஷ்ணனின் ப்ரீதியின்பொருட்டு அங்கிருந்து நூற்றொன்று யோசனை தூரமிருப்பதை ஸந்தேகாஸ்பதமாய் ஜராஸந்தனிடம் சொன்னார். அந்த பரமசிவனுடைய கதையை நிவிருத்தி செய்வதில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு சக்தி இருந்தாலும் அந்த கதையை பரிகரித்ததான ஹரிலீலையை தனக்கு கிடைக்கட்டுமென்று யோசித்து, ஜராஸந்தன் கேட்ட கேள்விக்கு நாரதர் மதுராபட்டணத்தின் மார்க்கத்தை ஒரு யோசனை தூரம் குறைத்துச் சொன்னார். பிறகு கிருஷ்ணனை உத்தேசித்து விட்டெறியப்பட்ட அந்த சிவனுடைய கதை, ஜராஸந்தனின் சரீரத்தை ஒன்றாய் சேர்த்தவளும் பாபிஷ்டளும் மனுஷ்யர்களை பக்ஷிப்பவளுமான ஜரை என்ற ராக்ஷஸியின் தலையில் விழுந்து அவளைக்கொன்றுவிட்டு பகவானுடைய ஆக்ஞையால் அந்த ஜராஸந்தனிடமிருந்து விலகி மறுபடியும் கைலாஸம் போய்விட்டது. ராஜனான ஜராஸந்தன் தன் தாயான ஜரை என்ற ராக்ஷஸியாலும் கதாயுதத்தாலும் நீங்கியவனாய் எல்லா அரசர்களையும் சேர்த்துக்கொண்டு இருபத்திமூன்று அக்ஷௌஹிணி ஸைன்யங்களுடன்கூடி மிகவும் கர்விஷ்டனாய் அக்ஷணமே கோபத்துடன் மதுராபட்டணம் வந்து சேர்ந்தான். குச்சிதபுத்தியுள்ள அந்த ஜராஸந்தன் பூரா மதுராபட்டணத்தையும் ஸைன்யங்களால் முற்றுகைப்போட்டு விந்தன், அவனுடைய தம்பியான அனுவிந்தன் இவர்களை தூதர்களாய் ஸ்ரீகிருஷ்ணனிடம் அனுப்பித்தான். அந்த விந்தானுவிந்தர்கள் ஸ்ரீகிருஷ்ணனிடம் வந்து மிக்க கர்வபூர்ணமானதும் ஸ்ரீகிருஷ்ணனின் விஷயத்தில் பரிஹாசமாயுள்ளதுமான ஜராஸந்தனுடைய வாக்யத்தைச்சொன்னார்கள். ஹே கிருஷ்ணா! நீ ஒருவன்தான் உலகில் அபிரசித்தமான பலம் பௌருஷம் இவைகளால் ச்ரேஷ்டரூபமானவன். இனி ஏற்படப்போகும் உன் பலம் வீரியம்

இவைகளின் ஆதிக்கத்தை அறியாமல் வீரியசூன்யனான நான் கம்ஸனுக்கு என் இரண்டு பெண்களை விவாகம் செய்து கொடுத்தேன். நீ அந்த கம்ஸனை ஸம்ஹரித்தாய். அத்யந்தம் துர்பலனான நான் பலிஷ்டர்களில் ச்ரேஷ்டனான உன்னை தரிசித்துவிட்டு பராக்கிரமமிழந்தவனாய் அஸ்தி ப்ராப்தி என்ற இரண்டு பெண்களுடன்கூடி தபோவனம் செல்லப்போகிறேன். ஆதலால் ஹே கிருஷ்ணா! சீக்கிரமே இப்போது என் கண்ணில் விழுவாய் இவ்வாறு ஜராஸந்தன் தூஷணைகள் கலந்ததும் பலம் கர்வம் இவைகள் பூர்ணமானதும் பகவானை பரிகசிப்பதுமான வார்த்தைகளை சொல்லியனுப்பியதை ஸ்ரீகிருஷ்ணர் கேட்டு "ஆம். சொன்னதெல்லாம் ஸத்யமே" என்று அர்த்தகர்பிதமாய் பதில் சொல்லி மந்தஹாஸம் செய்து ஸைனியங்களுடன் மதுராபட்டணம் விட்டு புறப்பட்டார். உத்தமமான சாமர்த்தியமுள்ள ஸ்ரீகிருஷ்ணர் ஸாத்யகி முதலான தன் சைனியங்களை மற்ற மூன்று கோட்டை வாசல்களிலும் நிற்கும்படி ஆக்ஞாபித்துவிட்டு தான் பலராமரை கூட்டிக்கொண்டு ராஜஸமூகங்களுடன் கூடியிருந்த ஜராஸந்தனிடம் யுத்தம் செய்ய மதுராபட்டணத்தின் வடக்கு கோட்டை வாசலிலிருந்து புறப்பட்டார். பலராமருடன் கூடிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் மிகவும் ப்ரகாசிப்பதாயுள்ள ரதங்களும் ஆயுதங்களும் அவருடைய இச்சையின்பேரில் பூமியில் வந்திறங்கின. தாருகனென்ற சாரதி லகான் பிடித்த ரதத்தில் ஸ்ரீகிருஷ்ணர் உட்கார்ந்துகொண்டு அவருடைய சொந்தமான சாரங்க தனுஸ்ஸு, நந்தகமென்ற கத்தி, ஸுதர்சனமென்ற சக்ராயுதம், பாஞ்சஜன்யமென்ற சங்கம், இரண்டு அம்பறாத்தூணிகள், கௌமோதகி என்ற கதாயுதம் இவைகளை எடுத்துக்கொண்டார். பூதேவியை அபிமானியாகக்கொண்டதும் வேதாத்மகமான நான்கு குதிரைகளைக் கட்டியதுமான ரதத்தில் ஸ்ரீகிருஷ்ணன் ஏறிக்கொண்டு நாணேற்றிய சாரங்கதனுஸ்ஸையும் க்ரூரமான பாணங்களையும் எடுத்து, ராஜச்ரேஷ்டர்களுடன் சேர்ந்த க்ரூரனான ஜராஸந்தனை உத்தேசித்து வேகத்துடன் புறப்பட்டார். சத்ருக்களின் ஸைனியத்தால் பொறுக்கமாளாத மேலான பலங்கொண்ட பலராமர் ரதத்திலேறிக்கொண்டு ஹலாயுதம் (கலப்பை) முஸலாயுதம் (உலக்கை) இவைகளை எடுத்துக்கொண்டு, தனுர்பாணம் அம்பறாத்தூணி இவைகளுடன், ஜராஸந்தனால் ஸம்ரக்ஷிதமான ஸைனியத்தை எதிர்நோக்கி சந்தோஷத்தால் கர்ஜித்துக்கொண்டுவந்து சேர்ந்தார். ராஜஸ்ரேஷ்டர்களின் கூட்டங்களுடன் கூடியிருந்த மகததேசாதிபதியான ஜராஸந்தன் தன்னை எதிர்த்து யுத்தத்திற்கு வரும் அந்த சக்திபடைத்த ஸ்ரீகிருஷ்ணரைக்கண்டு கோபத்துடன் நானாவகையான ஆயுத ஸ்ரேஷ்டங்களை ஸ்ருஷ்டி செய்துகொண்டு கரைபிரண்ட கடல்போல் எதிர்த்துவந்தான். ஜராஸந்தனை ரோஷப்படுத்த உத்தேசங்கொண்டு ஸ்ரீகிருஷ்ணர் உக்ரஸேனராஜனை முன்னே போகச்சொல்லி உக்ரஸேனனின் பின்னே புறப்பட்டு போனார். அப்பொழுது ஜராஸந்தன் தன் முன்னே நின்றிருந்த உக்ரஸேனனைப்பார்த்து சரீரம் நடுங்க அடியிற்கண்ட வார்த்தையைப் பேசினான். ஹே பாபிஷ்டனே! ராஜ்யத்தின் பேரில் ஆசையுள்ளவனே! வெட்கங்கெட்டவனே! மகனான கம்ஸனைக்கொல்ல காரணமானவனே! சத்ருவின் கக்ஷியில் சேர்ந்திருக்கிறவனே! என் எதிரில் நில்லாதே! ஒதுங்கிச்செல். நீ கிழ ஆட்டுக்குச் சமானம். என்னால் யுத்தத்தில் கொல்லப்பட அருகனன்று. ஸிம்ஹம் ஸிம்ஹத்தை எதிர்த்து யுத்தத்திற்கு செல்லுமேயன்றி நரியுடன் யுத்தத்திற்குச் செல்லாது. என்றிவ்வாறு ஜராஸந்தனால் நிராகரிக்கப்பட்டவரான போஜவம்சத்து அரசனான உக்ரஸேனராஜன் அம்பறாத்தூணியின்றும் க்ரூரமான பாணத்தை எடுத்து அந்த பாணத்தால் ஜராஸந்தனின் தனுஸ்ஸை சேதனம் செய்து கர்ஜித்தான். பலிஷ்டனான உக்ரஸேனராஜன் க்ரூரமான பாண சமூகங்களால் மீண்டும் ஜராஸந்தனை அடித்தான். கோபத்தால் கண்சிவந்து மற்றொரு தனுஸ் ஸ்ரேஷ்டத்தை எடுத்துக்கொண்டு உக்ரஸேனராஜனைகொல்ல வேண்டுமென்ற விருப்பத்துடன் க்ரூரமான வேகமுள்ளவனாய் யுத்தத்திற்கு வந்த ஜராஸந்தனைப் பார்த்துவிட்டு உத்தமனான கிருஷ்ணன் ரதத்திலேறிக்கொண்டு எதிர்த்து வந்தார். யுத்தத்திற்கு வரும் அந்த வீரியனான கிருஷ்ணனைப் பார்த்து ஜராஸந்தன், சிசுபாலன் பௌண்ட்ரக வாஸுதேவன் முதலான ராஜஸமூகங்களுடன்

கூடி மேலான கர்ஜனையுள்ள மேகம் மேருபர்வதத்தை உதக ஸமூகத்தால் வ்ருஷ்டி செய்வதுபோல் ஸ்ரீக்ருஷ்ணரை பல வகையான அஸ்திரங்கள் சிரேஷ்டமான ஆயுதங்கள் இவைகளின் சமூகங்களால் வ்ருஷ்டி செய்தான். எண்ணமுடியாத சக்தியுள்ள ஸ்ரீக்ருஷ்ணர் சாரங்கதனுஸ்ஸினின்றும் கிளம்பிய பாணஸமூகங்களைக்கொண்டு அரசர்கள் போட்ட சஸ்திர அஸ்திரங்களை நாற்புறமும் சேதித்து ஜராஸந்தனை ரதம் குதிரைகள் ஸாரதி இவைகளில்லாதவனையும் ஆயுதங்களிழந்தவனையும் வெண்குடை த்வஜம் இவைகள் அறுபட்டவனையும் சீக்கிரமே செய்தார். பீமசேனரிடம் ஸ்ரீக்ருஷ்ணரின்மீது அவர் வைத்திருக்கும் பக்தியையும் அவருடைய கீர்த்தியையும் தர்மத்தையும் ப்ரசித்தப்படுத்துவதற்காக ஸ்ரீக்ருஷ்ணர் அவரால் கொல்லப்பட ஜராஸந்தன் ஸாத்யமாயிருந்தாலும் அவனைக்கொல்லவில்லை. சிசுபாலன் பௌண்ட்ரக வாஸுதேவன் கீசகனுடன்கூடிய சல்யராஜன் ஸால்வராஜன் ஏகலவ்யன் முதலான ராஜர்களை ரதமில்லாதவர்களாய்ச் செய்தான். ஹம்ஸன், டிபகன், த்ருமராஜன், ருக்மி முதலானவர்கள், பால்ஹீகராஜன், நரகாஸுரனின் மகனான பகதத்தன், மைந்தன், விவிதன் முதலானவர்கள் மற்றும் அச்சமயம் பூமியிலிருந்த எல்லா அரசர்களும் ஸ்ரீக்ருஷ்ணருடைய பாணங்களால் சரீரம் பிளந்துபோய் பலாயனம் செய்தார்கள். சத்ரு ராஜர்களெல்லோரும் ஆயுதங்கள், த்வஜங்கள், கொடிகள், ரதங்கள், நான்கு குதிரைகள், ஸாரதிகள், கவசங்கள், இவைகள் நாசமாய்ப்போய் க்ரூரமான பாணங்களால் அடிபட்டதான பிளந்துபோன அவயவங்களுடையவர்களாய் நழுகிய வஸ்திரம், ஆபரணம், கூந்தலுடையவர்களாய் அலங்காரமிழந்தவர்களாய் உதிரத்தை வாயால் கக்கிக்கொண்டு அதிகமாய் பயந்துபோய் வெகு விரைவாய் ஓட்டம்பிடித்தனர். ஆயுததாரிகளான எல்லா அரசர்களும் துக்காஸ்பதமான இந்த அவஸ்தையை அடைந்து யுத்தத்தில் ஸ்ரீக்ருஷ்ணரால் ஓட்டம்பிடித்த ஸமயம் ஜராஸந்தன் அநேக ஆயுதங்கள் நிறைந்த வேறொரு ரதத்தில் உட்கார்ந்துகொண்டு க்ரூரமான பராக்கிரமமுள்ளவனாய் பலராமனிடம் வந்து சேர்ந்தான். ஓடிவரும் ஜராஸந்தனின் ரதத்தை

600 008



பலராமன் முஸலாயுதத்தால் த்வம்ஸம் செய்தார். ஜராஸந்தன் பலராமனுடைய விசாலமான மார்பில் கதாயுதத்தை ப்ரகாரம் செய்தான். பலராமன் முஸலாயுதத்தால் ஜராஸந்தனை ப்ரஹாரம் செய்தார். பலிஷ்டர்களில் உத்தமர்களான பலராமன் ஜராஸந்தன் இவர்கள் பயங்கரமான யுத்தம் செய்தனர். பலராமன் ஜராஸந்தன் இவர்கள் அந்த யுத்தபூமிக்குச் சமீபத்திலிருந்த எல்லாபர்வதங்கள் வ்ருக்ஷங்கள் கல்கள் இவைகளின் சமூகத்தை தங்கள் சஞ்சாரத்தால் பொடியாக்கி மகத்தான யுத்தம் செய்தனர். வஜ்ஜிராயுதத்தைவிட அத்யந்தம் திடமான சரீரமுள்ள மகா பலிஷ்டர்களான அந்த பலராமன் ஜராஸந்தன் இவர்களில் வெகுகாலம் ஸமமானதான முஷ்டி யுத்தம் நடந்தது. பிறகு கமலநேத்ரனான ஸ்ரீக்ருஷ்ணனின் பாஞ்சஜன்யசங்க கோஷத்தைக்கேட்டும் ஸ்ரீக்ருஷ்ணனால் ஓடிக்கொண்டிருந்த அரசர்களைக்கண்டும் பலராமன் யுத்தம் செய்யும் ஜராஸந்தனைப் பார்த்துபலத்தால் வ்ருத்தியடைந்தார். பலராமன் ஜராஸந்தனை விட்டுவிட்டு அமோகமான முஸலாயுதத்தை உயரத் தூக்கினர். ப்ருஹத்ராஜனின் மகனான ஜராஸந்தன் முஸலாயுதத்தால் தலையில் அடி விழுந்தவனாய் மகா மூர்ச்சையையடைந்தான். பிறகு பலராமன் ஜராஸந்தனைப் பிடித்தார். அச்சமயம் ஏகலவ்யன் ஸ்ரீக்ருஷ்ணருடைய பாணத்தால் ஓடிக்கொண்டு பலராமனுடைய சிரஸ்ஸில் அஸ்திரங்களை சீக்கிரமே ப்ரயோகம் செய்தான். பயந்தோடிய ஏகலவ்யனுடன் யுத்தத்தை ஸ்ரீக்ருஷ்ணர் அபேக்ஷிக்காமல் பிரம்மாவின் மனதினின்றும் பிறந்தவனும் தன்னுடைய மகனுமான ப்ரத்யும்னனை அக்ஷணமே தன்னுடைய மனதால் ஸ்ருஷ்டித்தார். ப்ரத்யும்னன் மகா அஸ்திர ஸமூகங்களை ப்ரயோகம் செய்துகொண்டு ஏகலவ்யனிடம் யுத்தத்திற்குச்சென்றான். பலராமன் பிறகு ஜராஸந்தனை கட்டி தன்னுடைய ரதத்திற்கு கொண்டுவந்தார். ஸ்ரீக்ருஷ்ணனின் புத்திரனான ப்ரத்யும்னன் யுத்தபூமியில் வெகுகாலம் யுத்தம் செய்து ஸ்திரமாய் நின்றிருந்த ஏகலவ்யனை ஆயுதமில்லாதவனாய்ச் செய்தான். பூர்வஜன்மத்தில் க்ரோதவசனென்னும் அஸுரக்கூட்டங்களின் அதிபதியான மணிமானென்றதைத்

யன் அவனுடைய அம்சத்தால் நிஷாதக ஜாதியில் ஏகலவ்யனென்ற பெயருடன் பூமியில் பிறந்தான். ஸ்ரீகிருஷ்ணர் ஏகலவ்யனை ஜயித்த பிறகு ப்ரத்யும்னனை மீண்டும் தன் வயிற்றில் சேர்த்துக்கொண்டு தன்னுடைய பாண ஸமூகங்களால் ஜராஸந்தனுடைய இருபத்திமூன்று அக்ஷௌஹிணி சைனியங்களையும் ஸம்ஹாரம் செய்து அநுபமான பராக்ரமமுள்ளவரும் உற்பத்தியில்லாதவருமான ஸ்ரீகிருஷ்ணன் மேலான கர்மாக்களுள்ளவனும் ஜராஸந்தனை அவன் மீண்டும் யுத்தத்திற்கு சைனியங்களைக் கொண்டுவருவதற்காக விட்டுவிட்டார். பாபிஷ்டனும் அக்ஞனுமான ஜராஸந்தன் வெட்கத்தால் தொங்கவிடப்பட்டதாயும் காந்தியிழந்ததுமான முகமுள்ளவனும், மிச்சம் மீதியுள்ள அரசர்களுடன் கூடியவனும், யாதவர்களுக்கு அதிபதியாக அவனே பட்டாபிஷேகம் செய்த அவனுடைய தௌஹித்ரனை முன்னிட்டுக்கொண்டு, அவனுடைய பட்டணமான கிரிவ்ராஜத்திற்குச் சென்றான். இவ்வாறு சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால் ஜராஸந்தன் யுத்தத்திற்கு வரும்பொழுதே அவனுடைய பெண் மக்களான அஸ்தி ப்ராஸ்தி இவர்களின் மகனுக்கு கம்ஸனுடைய ராஜ்யத்தை ஸம்பாதித்து தருவேனென்ற தைரியத்தால் மதுரா ராஜ்யத்திற்கு தன்னுடைய தௌஹித்ரனுக்கு அவன் பட்டாபிஷேகம் செய்தானென்ற புராணகதை ஸ்ரீபகவத்பாதாளால் சொல்லப்பட்டதாகிறது. மேலான பலங்கொண்ட ஜராஸந்தனை முதன் முதலில் யுத்தத்தில் ஜயித்து, புஷ்பவிருஷ்டி செய்யும் பிரம்மா, ருத்திரன், இந்திரன் முதலான தேவர்களால் துதிக்கப்பெற்று பலராமன் முதலான யாதவர்களுடன்கூடி மஹான்களின் கூட்டத்தால் நமஸ்கரிக்கப்பட்ட பாதமுள்ளவனும் ஸ்ரீகிருஷ்ணர் சீக்கிரம் மதுராபட்டணம் பிரவேசித்து சந்தோஷமடைந்தார்.

## பாண்டுராஜனின் மரணம்.

பாண்டவர்கள் அபிவிருத்தியை அடைந்துவரும்பொழுது இந்திர புத்ரனான அர்ஜுனனுக்கு ஒவ்வொரு வருடமும் வரும் அவனுடைய ஜன்ம நக்ஷத்திரம் பதினைந்தாவது தடவை வந்து சேர்ந்தது. அன்று அநேக காரியங்களில் ஈடுபட்டிருந்த நீதியை அறிந்தவளான குந்திதேவி ரிஷிஸமூகங்களுக்கு போஜனார்த்தமாய் பரமாறிக்கொண்டிருந்தார். (தொடரும்.)



## ஸ்ரீ வியாஸராஜஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் தொடர்ச்சி.)

இவ்வாறு சிலநாட்கள் ஜபித்துவரவும் கோணாவென்று சொன்னதற்கு தகுந்தபடி யமனுடைய வாகனமான எருமைக்கடா பிரம்மாண்டமான சுயரூபத்துடன் அந்த மூடனுடைய எதிரில் தோன்றி 'விப்ரோத்தமா! என்னை ஏன் கோணா கோணாவென்று தினம் அழைத்து வருகிறாய். உன் உபாஸனையால் நான் மகிழ்ந்திருக்கிறேன். என்னால் உனக்கு ஆகவேண்டியதைச் சொல். நான் அதைச்செய்யத்தயாராயிருக்கிறேன்" என்று வார்த்தை கூறியது. அந்த மஹிஷத்தைக் கண்டு அந்த சீடர் மனதில் சிறிதும் பயமடையாமல் நீ யார்? யாரைச் சேர்ந்தவன்? நீ ஏன் இங்கு வந்தாய்? என்று கேட்டார். அதற்கு அந்த மஹிஷம் நான் யமனுடைய வாகனம். நீ மிகுந்த பரிசுத்தனும் ஏகாக்ரமனதுடன் என் பெயரான கோண என்பதை பல நாட்கள் ஜபித்து உச்சரித்துக்கொண்டு வந்திருக்கிறாய். சற்குருவின் உபதேச மகிமையால் இந்த வார்த்தை மகாமந்திரம்போல் சித்தியடைந்திருக்கிறது. நான் ப்ரஸன்னனாகியிருக்கிறேன். உன் அபீஷ்டத்தைச் சொல் சீக்கிரம் என்றது. அப்போது அந்த சீடர் என் குருவைக்கேட்டுச் சொல்லுகிறேன் சற்று நில் என்று சொல்லி வியாஸராஜரிடம் ஓடிவந்து சற்குருவே! எனக்கு உபதேசம் செய்யும்படி நான் தங்களை கேட்டதற்கு என்னிடம் கோணாவென்றீர். கோணாவென்பது ஓர் மந்த்ரமென்றும் அதை தாங்கள் உபதேசம் செய்திருப்பதாயும் நினைத்து பரம பக்தியுடன் நிரந்தரமாய் இத்தனை காலம் ஜபித்தேன். எருமைக்கடா எருமைக்கடா என்று சொல்லிவந்ததால் யமனுடைய வாகனமான எருமைக்கடா தங்களுடைய உபதேச பலத்தால் சுயரூபத்துடன் வந்திருக்கிறது, என்ன காரியம் செய்ய வேண்டுமென்கிறது, ஆக்ஞாபிக்கவேண்டும் என்றான். இதைக்கேட்டு ஸ்ரீவியாஸராஜர் புன்சிரிப்புக்காட்டி அவனுடைய பக்தியைக்கொண்டாடி "நல்லது. யமவாகனம் வந்திருப்பதால் அஸாத்யமான காரியத்தை முடித்துக்கொள்வோம்: சிஷ்யா. நாம் வெட்டியிருக்கும் குளத்தில் அதிக ஜலமில்லை. சமீபத்திலுள்ள மலைக்கு பின்புறத்தில் ஏராளமான ஜலம் இருக்கிறது. நடுவிலுள்ள அம்மலையை தள்ளச்சொல்" என்றார். அந்த சீடர் வெகு விரைவாய் யமவாகனத்திடம் ஓடிவந்து இம்மலையைத் தள்ளிப்போடும்படி என் குரு ஆக்ஞாபித்திருக்கிறார். அப்பாலுள்ள ஜலம் ஓடிவரவேண்டும். எனக்கு அம்மட்டில்தான் உன்னாலாகவேண்

டியதென்றார். அப்படியே செய்கிறேன், நான் போய்வருகிறேனென்று சொல்லி அந்த மஹிஷம் சிடர் பார்த்திருக்கையிலேயே தன்னுடைய கொம்பை அம்மலையின் அடியில் கொடுத்து மலையை தூரத்தில் தள்ளி அப்பாலிருந்த ஜலப்ரவாஹம் ஓடிவரும்படி செய்து மறைந்தது. பள்ளத்தாக்கிலிருந்த பெரிய தடாகம் ஸமுத்ரம்போல் ஏராளமான ஜலம் நிறைந்து வெகு மனோஹரமாயிற்று. வியாஸஸமுத்ரமெனப்படும் அந்த தடாகம் இன்றைக்கும் ஸ்ரீவியாஸராஜமடத்து ஸ்வாதீனத்திலேயே விளங்குகிறது.

## ராஜ்யத்தைப் பெற்றது.

கிருஷ்ணதேவராயனின் கிருகரீதிப்படி குஹூயோகமென்ற பயங்கரமான காலம் ஸம்பவித்தது. ராகு அங்காரகன் சனி சூரியன் லக்னத்தில் வந்து பன்னிரண்டாமிடத்திலிருந்து அமாவாசை திதியில் சந்திரன் தியாஜ்யத்திலிருந்தால் குஹூயோகமென்று சொல்வதாய் ஜோதிடர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இந்த பயங்கரமான யோகம் தனக்கு நேரப்போவதாய் அறிந்து கிருஷ்ணதேவராயன் திகிலடைந்தான். அதை பரிகரித்துக்கொள்ள வியாஸராஜருக்கு தனது ராஜ்யத்தையே தானம் செய்ய நிச்சயித்தான். அதைப்பெற வியாஸராஜரை மிகவும் ப்ரார்த்தித்தான். வியாஸராஜர் கிருஷ்ணதேவராயனின்மீதுள்ள விசுவாசத்தால் அவ்வாறே ஒப்புக்கொண்டு அந்த யோகத்தில் ஸிம்ஹாஸனத்தின் அருகாமையில் வந்து அந்த யோகத்தின் தீக்ஷிண்யத்தை ஜனங்களுக்கு அறிவிக்க ஓர் காவி வஸ்திரத்தை உருண்டையாகச் சுற்றி ஸிம்ஹாஸனத்தின்மீது விட்டெறிந்தார். உடனே அந்த வஸ்திரம் பக்கென்று தீப்பற்றி சாம்பலாய்ப்போயிற்று. அரசன் அதைக்கண்டு ஆச்சரியப்படவும் வியாஸராஜர் இந்த யோகத்தில் இந்த ஸிம்ஹாஸனத்தில் நீ உட்கார்ந்திருந்தால் இவ்வாறு சாம்பலாய்ப்போயிருப்பாய். ஈசன் உன்னை ஸம்ரக்ஷித்தார் என்று சொன்னார். ஜனங்கள் இதைக்கேட்டு மிகவும் திகிலடைந்து அரசனுக்கு எப்படியாவது க்ஷேமம் ஏற்பட வேண்டுமென்று ப்ரார்த்தித்தனர். வியாஸராஜரை கிருஷ்ணதேவராயன் ஸிம்ஹாஸனத்தில் அமரச்செய்தான். பலவகை வாத்யங்கள் முழங்க விப்ரோத்தமர்கள் வேதகோஷங்களை கோஷிக்க ஸ்ரீவியாஸராஜருக்கு பட்டாபிஷேகம் நடந்தது. ராஜயோக்யமான சத்ரசாமராதி ஸகல மரியாதைகளையும், ஸமர்ப்பித்தான். ஸூதமாகத பந்திகள் ஜயாவிஜயீபவ என்று ஸ்தோத்திரம் செய்தனர். எல்லா ராஜாங்க காரியங்களும் ஸ்ரீவியாஸராஜரால் அச்சமயம் நடத்தப்பட்டன. கஜானாவின் கதவைத்



திறந்துவைத்து ஜனங்களுக்கு அவரவர்களின் இஷ்டப்படி திரவியங்களை வாரி இறைத்தார். ஸர்வாபீஷ்டங்களையும் அனுக்ரஹித்தார். பூமிகளை ஏராளமாய் மானியம் விட்டார். பூலோகத்தில் தோன்றிய கல்ப விருக்ஷந்தானோ இவர் என்று பிரஜைகள் பேசினர். அந்த யோகம் கழிந்தபின்பு மீண்டும் கிருஷ்ணதேவராயரிடமே ராஜ்யத்தை வியாஸராஜர் ஒப்புவித்துவிட்டார். வியாஸராஜர் ராஜ்யம் ஆண்டதைக் குறிக்க இப்பவும் ஸ்ரீவியாஸராஜரின் பீடத்துக்கு வரும் ஸ்வாமிகள் தினந்தோறும் ஸாயங்காலத்தில் ராஜவேஷத்துடன் ஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்து சிறிது நேரம் தர்பார் நடத்தி சிப்பந்திகளிடமிருந்து ராஜயோக்யமான மரியாதைகளைப் பெற்றுவருகின்றனர். இவ்வாறு அந்த வருடத்தில் கிருஷ்ணதேவராயனுக்கு கிருகபாதைகள் ஏற்பட்ட சமயமெல்லாம் வியாஸராஜருக்கு அநேககிராமங்களை தானம் செய்தான். கிருஷ்ணதேவராயன் தீர்த்தயாத்திரைகளைச் செய்து ராஜ்யத்தை அச்யுததேவராயனிடம் ஒப்புவித்து ராஜபதவியிலிருந்து விலகி பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டான். ஸ்ரீவெங்கடேசனின் மகா பக்தனானான். அவருடைய சன்னதியில் கிருஷ்ணதேவராயனுடைய பிம்பம் இன்றைக்கும் காணப்படுகிறது. அவனுடைய மரணகாலம் சமீபித்திருக்கையில் ஸ்ரீவியாஸராஜரை நமஸ்கரித்து தனக்கு நற்கதி ஏற்பட அனுக்ரஹிக்கும்படி ப்ரார்த்தித்தான். ஸ்ரீவியாஸராஜர் பரமானுக்ரஹம் செய்தார். கிருஷ்ணதேவராயனுக்குப்பின் அச்யுததேவராயனும் ஸ்ரீவியாஸராஜரை ஆதரித்தான்.

## ஹரிதாஸவர்க்கத்தின் ஸம்பந்தம்.

வியாஸகூடம், தாஸகூடம் என்று மாத்வர்களில் இருவகையார் இருப்பதாய் சொல்லப்படுவதுண்டு. ஸ்ரீவியாஸராஜர் வியாஸகூடத்தில் எப்படி முக்யமானவரோ அப்படித்தான் தாஸகூடத்திலும் முக்யஸ்தராவார். சங்கீதத்தில் மிகவும் நிபுணராயிருந்தார். மனோரம்யமான அநேக கீர்த்தனங்கள் முதலியவைகளை சுயம் கன்னட பாஷையில் ரசனம் செய்து பாடியுள்ளார். ஸ்ரீமத்வமத ப்ரமேயங்களை ஸாமானியர்களும் ஸுலபமாய் இந்த பதங்களின் மூலமாய் அறிந்து ஸ்ரீஹரி குருபக்தியைப்பெற்று ஸர்வமங்களங்களையும் பெறவேண்டுமென்பது இவருடைய கோரிக்கை. இவருடைய பதங்களில் கிருஷ்ணவென்ற முத்திரிகை காணப்படுகிறது. இவருடைய குருவான ஸ்ரீபாதராயர் தாஸகோஷ்டியில் மிகவும் ப்ரக்யாதராய் அநேக பதங்களை பாடிவந்தாராதலால் தம் குருவின் வழியையே ஸஜ்ஜனநாயகனான ஸ்ரீவியாஸ

ராஜர் பின்பற்றினார். ஸ்ரீவியாஸராஜரின் குணாதிசயங்களால் ப்ரஸன்னனான ஸ்ரீஹரி பண்டரிநாதனான ஸ்ரீபாண்டுரங்கன் ரூபத்தால் அவருடைய ஏகாந்த பக்தனான ஸ்ரீபுரந்தரதாஸரை ஸ்ரீவியாஸராஜரிடம் சென்று சிஷ்யராய் அமர்ந்து ப்ரம்மவித்தையை அப்யஸிக்கும்படி நியமனம் செய்தார். தேவரிஷியான நாரதரின் அம்சஸம்பூதராய், த்ரிலோகாதிபதியான மகேந்திரனின் ஆவேசம் பெற்றவராய், தன் பக்தி வைபவத்தால் ஜகதீசுவரனான பாண்டுரங்கனை தந்தையாகவும், தாயாகவும், தம்பியாகவும், தனயனாகவும், தூதனாகவும், சிஷ்யனாகவும், பந்துவாகவும், கதியாகவும் செய்துகொண்டவராய், சங்கீதத்திற்கு பரமாசாரியனென எல்லா மதத்தினர்களாலும் இன்றைக்கும் கொண்டாடப்பட்டுவரும் மகானுபாவரான ஸ்ரீபுரந்தரதாஸர் இவரிடம் ப்ரம்ம வித்தையைக்கற்று ஸ்ரீஹரியை சுவாதீனப்படுத்திக்கொள்ள ஸ்ரீவியாஸராஜரால் அநுகாரனென்றால் ஸ்ரீவியாஸராஜரின் அற்புத மகிமையை எவ்வளவென்று வர்ணிப்பதோ! ஸ்ரீபுரந்தரதாஸர்வாளே சுயம் ஓர் ஸுளாதியில் அறிவிப்பதாவது "வியாஸராயர சரணகமல தருசன எனகே, ஏஸு ஜன்மத ஸுக்ருதபலதிந்த பலிஸிது ஈகே, ஸாஸிரகுலகோடிபாவன்னவாகிது, ஸ்ரீசன்ன பஜிஸுவதிகாரி நானாதே, தோஷவிரஹிதனாத புரந்தரவிட்டலன, தாஸரகருணெ உ என்னம்யாலே இரலாகி, வ்யாஸராயர சரண உ யனகே தொரகிது. (1) குரு உபதேச இல்லாத மந்த்ர குரு உபதேச இல்லத த்யான. குரு உபதேச இல்லத க்ஞான, குரு உபதேச இல்லத கான, குரு உபதேச இல்லத பகுதி, குரு உபதேச இல்லத யோக, குரு உபதேச இல்லத க்ரியெகளு உரகன உபவாஸதந்தே காணிரோ, குரு வ்யாஸராயர கருணதிந்தெனகே வரமகாமந்த்ரகளு உபதேசிஸி, புரந்தர விட்டலனே பரனெந்தருஹி துரிதபரிஹரிஸி கொண்டேனு நானு. (2) இதன் தாத்பரியமாவது:— நான் எத்தனையோ ஜன்மங்களிற் செய்த புண்யம் பரிபக்வமாகி அதன் பலனால் ஸ்ரீவியாஸராஜரின் சரணகமலங்களின் தரிசனம் எனக்கு இப்பொழுது கிடைத்து நான் சிஷ்யனானேன். என்னுடையவும் என்னைச் சேர்ந்தவர்களுடையவும் எத்தனையோ கோடி குலம் பரிசுத்தமாகி உத்தாரமடைந்துவிட்டது. நான் ஸ்ரீபாண்டுரங்கனை அவருடைய உண்மையான மகாத்மிய ஞானமறிந்து அவரை பக்தி செய்ய அதிகாரியானேன். ஸர்வகல்யாண குணபூர்ணனாய் தோஷலேசமற்ற ஸ்ரீபுரந்தர விட்டலன் என்னிடம் ஹரிதாஸர்களுக்குற்ற கருணையை வைத்திருப்பதால் எனக்கு ஸ்ரீவியாஸராஜரின் சரணம் கிடைத்தது. (தொடரும்.)

---

அதியற்புத சம்பவங்களடங்கிய ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகளின் சரித்திரம் சீக்கிரமே துவக்கப்படும்



# மதிப்புரை.

மன்னார்குடி டிஸ்டிரிக்ட் முன்சீப் ஸ்ரீமான் S. K. பார்த்தஸாரதி அய்யங்கார், B.A., B.L., அவர்களால் எழுதி வெளியிடப்பட்டிருக்கும் வெகு ருசிகரமான இத்தமிழ் நாடகம் எமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நாரத: கலகப்ரிய: என்று ஸாமானியர்கள் அறிந்திருக்கிறார்களேயன்றி துஷ்டர்களை நிக்ரஹித்து சிஷ்டர்களை பரிபாலித்து தர்மங்களை நிலைநிறுத்த ஸ்ரீஹரி கொண்டிருக்கும் மேலான நோக்கத்தை பூர்த்தி செய்துகொள்ள பகவான் செய்துவரும் காரியங்களுக்கு அங்கபூதமாக பாகவதோத்தமனான நாரதர் செய்யும் பல அற்புத காரியங்களின் மர்மங்களை அறிவாளிகள்தான் அறிவார்கள். நாரதர் என்ற சப்தத்திற்கே ஸ்ரீவிஜயத்வஜதீர்த்தர் நாரம் த்யதி கண்டயதி இதி நாரத: என்றும் நாரம் ததாதி இதி நாரத: என்றும் வ்யுத்பத்தி செய்து மானிடர்களின் அக்ஞானத்தை தமது காரியங்களாலும் உபதேசங்களாலும் நிவிருத்திசெய்கிறவரென்றும் பகவத் விஷயகமான ஞானத்தைத் தந்தருளுகிறவரென்றும் பொருள்படுவதாய் அறிவித்திருக்கிறார். இந்த தத்வத்தை அறியாமல் ஹரி கதைச் செய்யும் பல பாகவதர்களாலும் நாடகத்தை நடத்தும் அநேக நடிகர்களாலும் மற்றும் பொதுப் பிரஸங்கம் செய்யும் பண்டிதர்களாலும் நாரதரைப்பற்றி குறிப்பிடவேண்டிய சந்தர்ப்பத்தில் அவரை ஓர் ஹாஸ்ய புருஷனாகவும் கலகக்காரனாகவும் கீழ்தரமான நடிகனாகவும் அறிவித்து ஸாமானியர்களை சிரிக்கும்படி செய்து ஆஸ்திகர்களின் மனம் புண்படுத்தப்படுகிறது. ஸ்ரீமான் அய்யங்காரவர்கள் இயற்றிய இந்நாடகம் அக்குறையை தீர்க்கவந்த ஓர் அரிய ஸாதனமென நாம் சொல்லத் துணிவோம். நாரதர் ஸ்திரியாகி மக்களைப்பெற்றது, அக்குழந்தைகளுடன் அவள் வருந்தியது, அகல்யையை கௌதமருக்கு விவாஹம் செய்துவைத்த விநோதம், துருவனுக்கு தத்வோபதேசம் செய்த மகிமை, பாரிஜாதமலரை ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஸமர்ப்பித்து பூமிக்கு பாரிஜாத விருக்ஷத்தைக் கொணரச்செய்து ஸத்யபாமைக்கு நற்கீர்த்தி ஏற்படச்செய்தது, ருக்மணி

யை ஸ்ரீகிருஷ்ணனை தானம் செய்யச்செய்து துளஸியின் மகாமகிமையை விளக்கிக்காட்டிய துலாபார சரிதை முதலான நாரதரின் சம்பந்தம் பெற்ற பல இதிகாஸங்களை வெகு அழகாய் ஜோடித்து நாரதரை கதாநாயகனாய்ச் செய்து படிக்கவும் நடிக்கவும் வெகு ருசிகரமாய் இருக்கும்படி எழுதப்பட்டிருக்கும் இந்நூலை நாடக அபிமானிகள் யாவரும் கொண்டாடாமலிருக்க முடியாது. நாடகஸிம்ஹமென்று பிரசித்திபெற்ற சென்னை ரிடையர்ட் ஸ்மால் காஸ்கோர்ட் ஜட்ஜ் ராவ்பகதூர் P. சம்பந்தமுதலியார் B A., B.L. அவர்களும் தற்போது சென்னை ஹைகோர்ட் ஜட்ஜாகயிருக்கும் கனம் திவான்பகதூர் K. சுந்தரம் செட்டியார் B.A , B L., அவர்களும் முன்னுரையை அளித்திருக்கின்றனர். சந்தர்பத்திற்கேற்றதான பாட்டுகளும் தனி அனுபந்தமாக சேர்க்கப்பட்டிருக்கிறது. சுமார் 84 பக்கங்களைக்கொண்ட இப்புத்தகத்தின் கிரயம் அணா பன்னிரண்டு. தபாற்கூலி வேறு. அடியில்கண்ட விலாசத்தில் இப்புத்தகம் கிடைக்கும்.

S. K. பார்த்தஸாரதி அய்யங்கார்,
டிஸ்டிரிக்ட் முன்சிப், மன்னார்குடி.

## அணுபாஷியம்.

இந்நகர் ஸ்ரீமான் R. ஸுதர்சனசர்மா அவர்கள் ஸ்ரீமன் மத்வாசாரியார் இயற்றிய அணுபாஷ்யத்திற்கு எளிய தமிழில் அர்த்தமெழுதி அதை தேவநாகரத்திலும், தமிழிலும் மூல ச்லோகத்துடன் பிரசுரித்திருப்பதை நாம் ஸந்தோஷமாய் வரவேற்கிறோம். ஸ்ரீமத்வமத கிரந்தங்கள் ஸாமானியர்களில் விசேஷமாய் ப்ரசாரமடைய அவை ஏராளமாய் தமிழில் வெளியாக வேண்டுமென்று எமது மித்திரன் இந்நான்கு வருடமாய் செய்து வந்த பிரசாரம் இப்போல் பெரிய ஸம்ஸ்தானாதிபதிகள் முதற்கொண்டு ஸாமான்ய பண்டிதர்கள் வரை எல்லோர் மனதையும் கவர்ந்திருப்பது குறிப்பிடத்தகுந்தது. சுமார் 16 பக்கங்களைக் கொண்ட இப்புத்தகத்தின் கிரயம் அணா நான்கு. மாத்வமித்திரன் சந்தாதாரர்களுக்கு மட்டில் இப்புத்தகமும் இவர் பிரசுரித்திருக்கும் இதர எல்லா நூல்களும் தபாற்கூலியின்றி அனுப்பப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவை கிடைக்குமிடம்.—

R. S. சர்மா, ஸாஹித்யசிரோமணி,
14 வெங்கடராயர் அக்கிரகாரம், கும்பகோணம்



## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 19-7-32. | மங்களவாரம் | சிரவணம், சிர. உப. விஷ்ணுபஞ்சக உபவா. |
| 22-7-32. | சுக்ரவாரம் | ஸ்ரீஜயதீர்த்தரின் (டீகாசாரியாளின்) புண்ய [தினம். |
| 29-7-32. | சுக்ரவாரம் | ஏகாதசி. |
| 2-8-32. | மங்களவாரம் | அமாவாஸை, விஷ்ணுபஞ்சக உபவாஸம். |
| 5-8-32. | சுக்ரவாரம் | ஸம்பத் சுக்ரவாரம், நாக சதுர்த்தி. |
| 6-8-32. | சனிவாரம் | நாகபஞ்சமி சிரான ஷஷ்டி, ரிக்வேதி பிரம்மசாரிகளுக்கு தலை ஆவணி ஆவிட்டம். |
| 12-8-32. | சுக்ரவாரம் | ஏகாதசி உபவாஸம், வரலக்ஷ்மீ விரதம். |
| 13-8-32. | சனிவாரம் | த்வாதசி, தயிர் விரதம் ஆரம்பம். |
| 15-8-32. | சோமவாரம் | சிரவணம், ரிக்வேதி உபாகர்மம், சிரவண உபவாஸம், விஷ்ணுபஞ்சக உபவாஸம். |
| 16-8-32. | மங்களவாரம் | பௌர்ணமி, விஷ்ணுபஞ்சக உபவாஸம். |
| 17-8-32. | புதவாரம் | காயத்ரி ஜபம், ஸஹஸ்ரா விருத்தி. |
| 18-8-32. | குருவாரம் | "ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் புண்யதினம்." |

## முக்கியமான அறிவிப்பு.

இந்த ஸஞ்சிகையுடன் எமது மித்திரனின் நான்காவது வருடம் பூர்த்தியடைகிறது. இதுகாறும் வெகு அன்புடன் எமது மித்திரனை ஆதரித்து போஷித்துவந்த எமது சந்தாதாரநேயர்களை அடுத்த வருடத்திய சந்தாதுகையை தயவு செய்து மணியார்டர் மூலமாகவே அட்வான்ஸாக கூடிய சீக்கிரம் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். சந்தாதாரர்களுக்கு அனுகூலமான காலத்தில் V. P. P. சேராமல் அவை திருப்பி அனுப்பப்பட்டு விசேஷமான நஷ்டம் பிரதி வருடம் ஏற்படுவதால் ஸ்ரீபகவத்பாதாளின் இனிய மொழிகளை வெளியாக்கிவரும் ஸ்ரீ ஹரி குரு சரணஸேவகனான இம்மித்திரனுக்கு பணக்கஷ்டமும் நஷ்டமும் ஏற்படாமலிருக்கச்செய்ய வேண்டுகிறோம். இவ்வருடத்தில் V. P. P. அனுப்புவதை கூடியவரை குறைக்க உத்தேசம். பணமொண்டையால் எமது மதத்தினரில் ஒன்றிரண்டு பத்திரி

கைகள் நடத்தப்படமுடியாமல் தத்தளித்து வருவதால் எமது மித்திரனிடம் அளவிலா அன்பைக்காட்டிவரும் எமது சந்தாதார நேயர்கள் எமது மித்திரனை அந்த ஆவஸ்தைக்குள்ளாக்காமல் சந்தா தொகையை முன்பணமாய் அனுப்பி தைரியப்படுத்தக்கோருகிறோம். மகாமகத்தின் நிமித்தமாய் இந்நகர் எல்லா அச்சாபீஸ்களில் இருந்துவரும் வேலைத்தொந்தரவால் பௌர்ணமியன்றே எமது பத்திரிகை சிலமாதங்களில் வெளியாக்கமுடியாமற்போயினும் பௌர்ணமிகழிந்த ஒன்றிரண்டு நாட்களில் சரியாய் வெளியாகி அநேக நூற்றுக்கணக்கான சந்தாதாரர்களுக்கு அனுப்பப்பட்டு அவைகள் சரிவர சேர்ந்துவருகின்றன. இப்பால் ஒரு சிலருக்கு சரிவர சில மாதங்களில் கிடைத்துவருவதில்லை என்றும் அவர்கள் இதற்காக முக்காலணா செலவழிக்கவேண்டியிருக்கிறதென்றும் அவர்கள் எழுதும் கடிதங்களைக்காண நாம் மிகவும் வருத்தமடைகிறோம். அதற்காக எங்களை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். ஒரே காலத்தில்தான் எல்லா பாக்கெட்டுகளும் போஸ்ட் செய்யப்படுகின்றனவென்று மீண்டும் உறுதி கூறுகிறோம். அவஸ்யமான சர்தார்பத்திலும் தபாலதிகாரிகளுக்கும் புகார் எழுதுகின்றோம். பத்திரிகை கிடைக்கவில்லையென்று எழுதும் சந்தாதாரர்களுக்கு எச்சந்தர்ப்பத்திலும் நாம் திரும்பி அந்த சஞ்சிகைகளை அனுப்பாமலிருப்பதில்லை. இப்பவும் எந்த சஞ்சிகைகள் கைவசமில்லையென்று சந்தாதாரர்கள் யார் அறிவித்தாலும் அவைகளை இனாமாக தபாற்கூலியின்றி அனுப்பவும் தயாராகயிருக்கிறோம். எமது மித்திரன் பைண்டு செய்யப்பட்டு சாசுவதமாய் மாத்வர்களின் வீடுகளில் ஸ்திரீ புருஷர்களை வருக்கும் ஞானத்தை புகட்டிக்கொண்டு இருந்துவரவேண்டுமென்பதுதான் எமது நோக்கம். மூன்றாவது வால்யத்தையும் நான்காவது வால்யத்தையும் தனியாக பைண்டு செய்யப்பட அந்தந்த சஞ்சிகைகளின் விஷய அட்டவணைகளை அடுத்த சஞ்சிகையுடன் அனுப்ப உத்தேசித்திருக்கிறோம். எல்லாவகையிலும் மாத்வர்களுக்கு மித்திரனாய் உழைத்துவரும் இம்மாத்வமித்திரனை சந்தாதார நேயர்களும் கைவிடாது பலவகையிலும் ஆதரிக்க வேண்டுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

மானேஜர் மாத்வமித்திரன்,
ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

---

வழக்கப்படி ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் ஆராதனையை கும்பகோணத்திலேயே நடத்த நிச்சயித்திருக்கிறேன்.

மைசூர் காஜாரிதாஸர்.

உ08695


## மாத்வமித்திரன்.

ஸ்ரீமத்வமதத்தின் உயர்தர நூல்களை சுலபமான தமிழில் சரியானபடி போதிப்பதில் இப்பத்திரிகை இணையற்றது. மடாதிபதிகள் பண்டிதர்கள் பட்டதாரிகள் பணக்காரர்கள் மிட்டாதாரர்கள் முதலியவர்கள் யாவரும் இப்பத்திரிகையை சிலாகிப்பதால்தான் தமிழ்நாடெங்கும் இது சந்தாதாரர்களைக்கொண்டுள்ளது. பத்திரிகையின் வாயிலாய் ஸ்ரீமத்வமதத்தை அறியவிரும்புகிறவர்கள் இப்பத்திரிகைக்கே சந்தாதாரராய்ச் சேருங்கள். இதன் வருடசந்தா முன் பணம் ரூ. 3. பழைய பிரதிகள் விலைக்கு கிடைக்கும். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒரு வாரத்திற்குள்ளாகவே நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பிறகு எழுதினால் இந்த ஆபீசு ஜவாப்தாரியல்ல. பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். போஸ்டாபீசின் பெயரை இங்கிலீஷில் சரியான ஸ்பெல்லிங்குடன் எழுதியனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் மேல்விலாஸமறிவிக்கப்படவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீ வியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

பாதிவிலை! பாதிவிலை !!

## சொற்பகாலத்திற்குத்தான்.

மாத்வமித்திரன் வாசகர்களுக்குமட்டில் மாத்வமித்திரன் பிரசாரமடைய அன்புடன் இவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறது.

## அபூர்வ நாடகங்கள்.

துருவா (ஸ்ரீமான் பாகவதரங்கதாசாரியார் ஆசிரியர்) 0—6—0
உஷாபரிணயம் (ஸ்ரீமான் A. R. ராஜகோபால செட்டியார் பதிப்பாசிரியர் 0—4—0
சக்குபாய் ஷை. 0—4—0

தபாற்கூலி வேறு. மேற்கண்ட புஸ்தகங்கள் எமது ஆபீஸில் கிடைக்கும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

## கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பேரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஸிபிக் இருக்கையில் 3மாதகாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள். ஓர் பாட்டில் ரூ 2—12—0

ஆஸ்த்மா க்யோர் இதர மருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர் பாட்டில் ரூ 4—8—0

ஆன்டிடயாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6 மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும் ஓர் டின் ரூ 4—12—0

ஆர்டருடன் ரூ. மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்.

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S. India)

# டி. எஸ். ஆர்.
## அண்டு
# கம்பெனி,
## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 — தந்திவிலாஸம் "கோகுல்"

எங்கள் வாஸனாதிரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்குதயாராக
இருக்கும் ஸாமான்களின்விபரம்.

வாஸனைப்பாக்கு
வாஸனைச்சுண்ணாம்பு
வாஸனைப் புகையிலை
ஸ்னானப்பவுடர்
கேஸர் பவுடர்
அம்பர், அரகஜா
தசாங்கம்

பலகாய்கரிஊர்காய்கள்
ரோஜாப்பூ குல்கந்து
ஷர்பத் தினுசுகள்
கொப்பரைச்சீவல்
கோகுல் கூந்தல் [தைலம்
பற்பொடி
ஊதுவத்திகள்

சந்தனாதித் தைலம்
அரைக்கீரைவிதைத் தைலம்.
மற்றும் அநேக வாஸனைசாமான்களும் கிடைக்கும்
கேட்லாக்குக்கு எழுதுங்கள்



Printed at Sri Venkateswar Printing Works and
Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.